தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

## 21.10.2013

### 50% மானியத்தில் மிளகாய் நாற்று

வீரிய ரக மிளகாய் நாற்று 50 சதவீத மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படும் என அண்ணா கிராமம் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் பிரேமா தெரிவித்துள்ளார்.

நெய்வேலி, விருத்தாசலம் அரசு தோட்டக்கலைப் பண்ணையில், வீரிய ஒட்டு ரக மிளகாய் நாற்று உள்ளது. இது நவம்பர் முதல் வாரத்தல் விநியோகிக்கப்படும். 80 பைசா மதிப்புள்ள ஒரு நாற்று 50 சதவீத மானியத்தில் 40 பைசாவுக்கு வழங்கப்படும். தேவைப்படும்

விவசாயிகள் தோட்டக்கலைத் துறை அதிகாரிகளை அணுகி

பெற்றுக்கொள்ளலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

### பிசான பருவ சாகுபடிக்கு பாபநாசம் அணை திறப்பு

தாமிரவருணி பாசனத்தில் பிசான பருவ சாகுபடிக்காக பாபநாசம் அணையிலிருந்து ஞாயிற்றுக்கிழமை தண்ணீர் திறக்கப்பட்டது. இதன்மூலம் திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் 86,107 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும் என அமைச்சர் பூ. செந்தூர்பாண்டியன் தெரிவித்தார்.

பிசான பருவ சாகுபடிக்கு பாபநாசம், சேர்வலாறு, மணிமுத்தாறு அணைகளிலிருந்து தண்ணீர் திறந்துவிட முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டார். அதன்படி, பாபநாசம் அணையிலிருந்து ஞாயிற்றுக்கிழமை தண்ணீர் திறக்கப்பட்டது.

மாவட்ட ஆட்சியர் சி. சமயமூர்த்தி, மாநில வீட்டு வசதி வாரியத் தலைவர் ஆர். முருகையாபாண்டியன் ஆகியோர் முன்னிலையில், மாநில இந்து சமயஅறநிலையத் துறை அமைச்சர் பூ. செந்தூர்பாண்டியன், சுற்றுலாத் துறை அமைச்சர் எஸ்.பி. சண்முகநாதன் ஆகியோர் தண்ணீரைத் திறந்துவிட்டனர்.

பின்னர் அமைச்சர் செந்தூர்பாண்டியன் செய்தியாளர்களிடம் கூறுகையில், திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் 11 கால்வாய்கள் மூலம் பாசனம் பெறும் 86,107 ஏக்கர் நிலங்களுக்கு 163 தினங்களுக்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. நீரை சிக்கனமாகப் பயன்படுத்தி விவசாயிகள் பயன்பெற வேண்டும் என்றார்.

அணையிலிருந்து முதல் கட்டமாக நொடிக்கு 600 கனஅடி தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது. பாசனத் தேவையைப் பொறுத்து கூடுதலாகத் திறந்துவிடப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர். அணையின் நீர்மட்டம் 81 அடியாக இருந்தது. அணைக்கு நொடிக்கு 558.10 கனஅடி நீர்வரத்து இருந்தது.

இந்நிகழ்ச்சியில் மாநகராட்சி மேயர்கள் விஜிலா சத்தியானந்த் (திருநெல்வேலி), சசிகலா புஷ்பா (தூத்துக்குடி), தாமிரவருணி வடிநில கோட்ட செயற்பொறியாளர் எம். முத்துப்பாண்டியன், இசக்கி சுப்பையா எம்.எல்.ஏ., அணை செயற்பொறியாளர் ஸ்ரீதர், உதவி செயற்பொறியாளர்கள் ஆர். தமிழ்ச்செல்வன், டேவிட், பாலசுப்பிரமணியன், புலிகள் காப்பக துணை இயக்குநர் சி. குருசாமி, மாநில கூட்டுறவு இணையத் தலைவர் எம். சக்திவேல்முருகன், வி.கே.புரம் நகராட்சித் தலைவி இ. மனோன்மணி, திருநெல்வேலி கூட்டுறவு அச்சகத் தலைவர் எஸ். முத்துசாமி, மாநகர் மாவட்ட அதிமுக செயலர் எஸ். முத்துக்கருப்பன், உதவி பொறியாளர்கள் ஏ.பி. மாயன்முருகன், கிருஷ்ணமூர்த்தி, ராஜா, தாமிரவருணி திட்டக்குழுத் தலைவர் உதயசூரியன், நகராட்சி துணைத் தலைவர்கள் ரா. மாரிமுத்து, தி. கணேசபெருமாள், அம்பாசமுத்திரம் வட்டாட்சியர் ரா. சரஸ்வதி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

அமைச்சர் உத்தரவு: பாபநாசம் அணையில் படகு சவாரி செல்லும் சுற்றுலாப் பயணிகள், அருவியில் தர்ப்பணம் செய்ய விரும்புவோரை பாணதீர்த்த அருவியில்

குளிக்க அனுமதிக்குமாறு புலிகள் காப்பக துணை இயக்குநரை அமைச்சர் செந்தூர்பாண்டியன் கேட்டுக்கொண்டார். பக்தர்கள் அருவியில் குளிக்க சிறப்பு அனுமதி வழங்கப்படும் என துணை இயக்குநர் தெரிவித்தார்

**கால்நடை மருத்துவ முகாம்**

பட்டுக்கோட்டையை அடுத்த நாட்டுச்சாலை கிராமத்தில் இலவச கால்நடை மருத்துவ முகாம் அண்மையில் நடைபெற்றது.

கோட்டை ரோட்டரி சங்கமும், அரசு கால்நடை துறையும் இணைந்து நடத்திய இந்த முகாமில் சிறந்த கால்நடைகள் தேர்வு செய்யப்பட்டு, பரிசுகள் வழங்கப்பட்டன.

கோட்டை ரோட்டரி சங்கத் தலைவர் ஆர்.டி. பூபதி தலைமை வகித்தார். கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குநர் டாக்டர் ஆர். செல்லத்துரை முகாமைத் தொடக்கிவைத்தார். டாக்டர் சா. வீரமணி தலைமையிலான குழுவினர் கால்நடைகளுக்கு சிகிச்சையளித்தனர்.

இதில் ஊராட்சித் தலைவர் என். சாமித்துரை மற்றும் ரோட்டரி சங்க நிர்வாகிகள் பங்கேற்றனர். முன்னதாக, சி.வி தங்கையன் வரவேற்றார். கோட்டை ரோட்டரி சங்கச் செயலர் ஜி. சதீஷ்குமார் நன்றி கூறினார்.

**விவசாயிகளுக்கு 75% மானியத்தில் பூச்சிக் கொல்லி மருந்து வழங்க வலியுறுத்தல்**

அனைத்து விவசாயிகளுக்கும் 75 சதவிகித மானியத்தில் பூச்சிக் கொல்லி மருந்து வழங்க வேண்டும் என மதிமுக வலியுறுத்தியுள்ளது.

திருவாரூரில் சனிக்கிழமை நடைபெற்ற மதிமுக மாவட்ட இளைஞரணி கலந்துரையாடல் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 2013 டிசம்பருக்குள் இளைஞரணிக்கு அதிகளவில் உறுப்பினர்கள் சேர்ப்பது, தமிழக அரசு மதுவிலக்கை முழுமையாக அமல்படுத்த வலியுறுத்துவது, திருவாரூர் கமலாலயம் வடகரையை உடனடியாக சீரமைக்க வேண்டும். மாவட்டத்தில் உள்ள அனைத்து நீர்நிலைகளையும் தூர்வார வேண்டும். விவசாயிகளுக்கான 2012-2013-ம் ஆண்டுக்கான பயிர்க் காப்பீட்டுத் தொகையை வழங்க வேண்டும். 2012-2013-ம் ஆண்டில் விவசாயிகள் பெற்ற வங்கிக் கடனை முழுமையாக ரத்து செய்ய

வேண்டும் என்பன உள்ளிட்டத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மாவட்ட இளைஞரணிச் செயலர் மாசிலாமணி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், மாவட்டச் செயலர் டி. பாஸ்கர், மாநில இளைஞரணிச் செயலர் வே. ப. ஈஸ்வரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**கோமாரி நோய் தடுப்பூசி முகாம்**

அரூரை அடுத்த நெருப்பாண்டகுப்பத்தில் கோமாரி நோய் தடுப்பூசி முகாம் சனிக்கிழமை நடைபெற்றது.

வனத் துறை, கால்நடை பராமரிப்புத் துறையினர் இணைந்து இந்த முகாமை நடத்தினர். தருமபுரி மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தாக்குதல் இருப்பது தெரிய வந்துள்ளது.

கிராமப் பகுதியில் உள்ள கால்நடைகள் வனப் பகுதியில் மேய்ச்சலுக்காக செல்கின்றன. அப்போது இந்தக் கால்நடைகளுக்கு உள்ள நோய்க் கிருமிகள் வனப் பகுதியில் உள்ள வன விலங்குகளை தாக்கும் சூழ்நிலையுள்ளது. இதனால், வனத் துறையினரும், கால்நடை பராமரிப்புத் துறையினரும் இணைந்து கோமாரி நோய் தடுப்பூசி முகாமை நடத்தினர்.

கோமாரி நோய் தடுப்பூசி முகாமை மாவட்ட வன அலுவலர் (அரூர்) எஸ்.ராமசுப்பிரமணியம் தொடக்கிவைத்தார். அரசு கால்நடை உதவி மருத்துவர் ஜி.ராமகிருஷ்ணன் கால்நடைகளுக்கு தடுப்பூசிகளைச் செலுத்தினார். இந்த முகாமில், மொரப்பூர் வனச் சரகர் என்.ஆறுமுகம், வனவர் சி.வேடியப்பன், வனத் துறை ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

இதில்,ஆடு, மாடு, எருமை உள்ளிட்ட 350-க்கும் மேற்பட்டக் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசிகள் போடப்பட்டன.

**தருமபுரியில் மழை: விவசாயிகள் மகிழ்ச்சி**

தருமபுரி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஞாயிற்றுக்கிழமை பெய்த மழையால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

தருமபுரி மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக வெயிலின் தாக்கம் அதிகரித்திருந்தது.

இந்த நிலையில், ஞாயிற்றுக்கிழமை அதிகாலை தருமபுரி நகரப் பகுதியில் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது.

மேலும், அதிகாலை 5 மணியிலிருந்து சுமார் 2 மணி நேரத்திற்கு மேல் நகரில் சாரல் மழை பொழிந்தது.

இதைத்தொடர்ந்து, பாலக்கோடு, பஞ்சப்பள்ளி, நல்லம்பள்ளி, மாரண்டஹள்ளி மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் மாலை 6 மணியிலிருந்து 8 மணி வரை பரவலாக மழை பெய்தது.

இதனால், விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

**கோவையில் 297 மி.மீ. மழை:அன்னூரில் 55 மி.மீ. பதிவு**

கோவை மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை காலையுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் 297 மில்லி மீட்டர் மழை பதிவாகி உள்ளது.

பொதுவாக, தமிழகத்தில் தென்மேற்குப் பருவ மழைக் காலம் ஜூனில் தொடங்கி செப்டம்பரில் முடிவடையும். தற்போது, அக்டோபர் வரை தென்மேற்குப் பருவமழை தொடர்ந்து பெய்கிறது.

இதனிடையே வடகிழக்குப் பருவமழை தொடங்குவதற்கான அறிகுறி தென்பட்டுள்ளது. இதன்படி, மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில் நல்ல மழை பெய்து வருகிறது. கோவை மாவட்டத்தைப் பொருத்தவரையில் தென்மேற்குப் பருவ மழைக் காலத்தில் போதிய மழை பெய்யவில்லை. கேரளத்தில் பெய்த மழை காரணமாக கோவை, ஈரோடு, திருப்பூர் மாவட்டத்திற்கு நீர் ஆதாரமாக விளங்கும் பில்லூர், சிறுவாணி மற்றும் ஆழியாறு அணைகள் நிரம்பின.

ஆனால், கோவையில் கிணத்துக்கடவு, பொள்ளாச்சி உள்ளிட்ட பகுதிகளில் மட்டுமே நல்ல மழை பெய்தது. குறிப்பாக, மாவட்டத்தில் உள்ள 12 வட்டாரங்களில் அன்னூர், காரமடை வட்டங்களில் மழை சரியாகப் பெய்யவில்லை. இதனால், அப்பகுதியில் விவசாயம் பாதித்தது. விவசாயிகள் ஆழ்துளைக் கிணறுகளை அமைக்க ஆர்வம் காண்பித்து வந்தனர்.

தற்போது வடகிழக்குப் பருவமழை தொடங்குவதற்கு அச்சாரமாக கோவை மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக இரவு நேரங்களில் நல்ல மழை பெய்து வருகிறது. இது, விவசாயிகளிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கோவை மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் 297 மி.மீ. மழை பதிவாகி உள்ளது.

மாவட்டத்தில் பிற இடங்களில் பதிவாகியுள்ள மழை விவரம் (மில்லி மீட்டரில்): அன்னூர் - 55, பொள்ளாச்சி - 43, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் - 42, கோவை தெற்கு - 40, பீளமேடு - 31, பெரியநாயக்கன்பாளையம், மேட்டுப்பாளையம் -20, சூலூர் -12, வால்பாறை பி.ஏ.பி. -11, சின்கோனா - 10, வால்பாறை தாலுகா அலுவலகம் - 9, சின்னக்கல்லார் -4.

**திண்டுக்கல் மாவட்டத்தில் பரவலாக மழை விவசாயிகள் மகிழ்ச்சி**

திண்டுக்கல் மாவட்டத்தின் அனைத்து பகுதியிலும் பரவலாக மழை பெய்ய தொடங்கியுள்ளதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

திண்டுக்கல் மாவட்டத்தில் கடந்த செப்டம்பர் மாதத்தின் முதல் வாரம் பல இடங்களிலும் பரவலாக மழை பெய்ய தொடங்கியது. இதனை அடுத்து சுமார் 30 ஆயிரம் ஹெக்டேரில் மானாவாரி பயிர்களான மக்காச் சோளம், பயறு வகைகள், பருத்தி, சூரியகாந்தி உள்ளிட்ட பயிர்கள் சாகுபடி செய்யும் பணிகள் தொடங்கப்பட்டன.

ஆனால் முதல் வாரத்தில் பெய்த மழை, அதன் பின்னர் தொடர்ந்து பெய்யவில்லை. இதனால், ஒரு மாதம் வளர்ந்த பயிர்கள் அனைத்தும் கருகும் நிலை ஏற்பட்டது. இந்நிலையில் கடந்த சில நாள்களாக மாவட்டத்தின் அனைத்து பகுதியிலும் மழை பெய்ய தொடங்கியதால் கருகும் நிலையில் இருந்த பயிர்கள் பாதுகாக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

பருவ மழை தொடர்ச்சியாக பெய்தால், மாவட்டத்தில் 17ஆயிரம் ஹெக்டேரில் இறவை சாகுபடி விரைவில் தொடங்கிவிடலாம் என்ற ஆர்வத்தில் விவசாயிகள் உள்ளனர். சனிக்கிழமை மாவட்டத்தில் பெய்த மழை அளவு வருமாறு(மி.மீ): திண்டுக்கல்-10.40, கொடைக்கானல்-11.80, நத்தம்-73, நிலக்கோட்டை-12.20,

பழனி-7, வேடசந்தூர்-18.09, சத்திரபட்டி-7, வேடசந்தூர் புகையிலை மையம்-20, கொடைக்கானல் போர்ட்கிளப்-11.25, காமாட்சிபுரம்-30.

**சேமிப்பு கிடங்கு அமைப்பதற்கு தோட்டக்கலைத் துறை சார்பில் மானியம்**

உற்பத்தி பொருள்களை குளிரூட்டப்பட்ட கிட்டங்கிகளில் வைத்து சேமிக்கும் வகையில் விவசாயிகளுக்கு மானியத்துடன் கூடிய நிதி உதவி தோட்டக்கலைத் துறை சார்பில் வழங்கப்படுகிறது.

இதுகுறித்து தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர் ராஜாமுகமது(கொடைக்கானல்) தெரிவித்தது:

தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின் மூலம், ஒருங்கிணைந்த அறுவடைக்கு பிந்தைய மேலாண்மை திட்டத்தின் கீழ் சிப்பம் கட்டும் கூடாரம் அமைப்பதற்கு 50 சதவீத மானியத்தில் ரூ.3 லட்சம், வங்கி கடனுதவியுடன் இணைந்து 40 முதல் 50 சதவீதம் மானியத்தில் குளிரூட்டும் அலகு அமைப்பதற்கு ரூ.15 லட்சம்(6 டன்), நடமாடும் குளிரூட்டும் அலகுக்கு ரூ.25 லட்சம்(5 டன்), குளிர்பதன சேமிப்பு கிடங்கி மற்றும் பழங்கள் பழுக்க வைக்கும் அறை அமைப்பதற்கு மெட்ரிக் டன்னிற்கு ரூ.6ஆயிரம்(மொத்த கொள்ளளவு 5000 மெட்ரிக் டன்), குளிரூட்டப்பட்ட வேனுக்கு ரூ.24 லட்சம்(6 டன் கொள்ளளவு), நடமாடும் பதப்படுத்தும் அலகுக்கு ரூ.24 லட்சம் வழங்கப்படுகிறது.

இதேபோல், குறைந்த மின் சக்தியை பயன்படுத்தி குளிரூட்டும் அறை, வெங்காய சேமிப்பு அறை, மின்சாரம் இல்லாத குளிரூட்டும் அறை கட்டுவதற்கு மானியம் வழங்கப்படுகிறது. மேலும், விளைபொருள்கள் விற்பனை செய்வதற்காக தனியார் மற்றும் அரசுடன் இணைந்து பிரதான சந்தை அமைக்கப்பதற்கு ரூ.150 கோடியில் 25 முதல் 40 சதவீத மானியம், வங்கி கடனுதவியுடன் ரூ.20 லட்சத்தில் அமைக்கப்படும் கிராமப்புற சந்தைகளுக்கு 40 முதல் 50 சதவீத மானியம் வழங்கப்படும்.

25 உறுப்பினர்களை கொண்ட விவசாயக் குழுக்கள், சுய உதவிக் குழுக்கள், மகளிர் விவசாயக் குழுக்கள் மற்றும் தனியார் தொழில் முனைவோர், பொதுத்துறை

மற்றும் அரசுத்துறை நிறுவனங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் இத்திட்டத்தில் பயன்பெறலாம். இத்திட்டம் குறித்து கூடுதல் விவரங்களை அறிவதற்கு அந்தந்த பகுதியில் உள்ள தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம் என தெரிவித்துள்ளார்.

**பரவலாக மழை:வைகை அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு**

தேனி மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக பரவலாக மழை பெய்து வருவதால் வைகை அணைக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது.

தேனி மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக தொடர்ந்து பரவலாக மழை பெய்து வருகிறது. கம்பம், போடி, பெரியகுளம், ஆண்டிபட்டி ஆகிய பகுதிகளில் அதிக அளவில் மழை பெய்துள்ளது.

வருஷநாடு மலைப் பகுதியில் மழை பெய்து வருவதால், மூல வைகை ஆற்றில் நீர்வரத்து அதிகரித்து உள்ளது. பெரியாறு அணை நீர்ப் பிடிப்பில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் அணையின் நீர்மட்டம் சீராக உயர்ந்து வருகிறது.

மாவட்டத்தில் பெய்து வரும் மழை, பெரியாறு அணையில் இருந்து திறந்து விடப்படும் தண்ணீர் ஆகியவற்றால் வைகை அணைக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது.

வைகை அணைக்கு அக்.16ஆம் தேதி விநாடிக்கு 763 கன அடியாகவும், 17ஆம் தேதி 1,189 கன அடியாகவும், 18ஆம் தேதி 1,085 கன அடியாகவும், 19ஆம் தேதி 1,536 கன அடியாகவும் தண்ணீர் வரத்து இருந்தது. ஞாயிற்றுக்கிழமை விநாடிக்கு 1,595 கன அடி வந்து கொண்டிருந்தது.

**அரசு மானியத்துடன் நாட்டுக்கோழி வளர்ப்புத் திட்டம்**

நாட்டுக்கோழி வளர்ப்புத் திட்டத்தில் ஆர்வம் மற்றும் தேவையான அளவு இடம் உள்ளவர்கள் விண்ணப்பித்தால் அரசு மானியம் வழங்கப்படும் என கூட்டுறவு மற்றும் உணவுத் துறை செயலர் மற்றும் சிவகங்கை மாவட்ட கண்காணிப்பு அலுவலர் எம்.பி. நிர்மலா தெரிவித்தார்.

சிவகங்கை மாவட்டத்தில் நடைபெற்று வரும் வளர்ச்சிப் பணிகளை சனிக்கிழமை திடீர் ஆய்வு மேற்கொண்டார். ஒக்கப்பட்டி கிராமத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் பணிகளை ஆய்வு செய்த போது பயனாளிகள் தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள அளவை நிறைவு செய்யும் போது அரசு நிர்ணயித்துள்ள ஊதியத்தை பெறலாம் என்றார். இங்குள்ள சத்துணவு மையத்தைப் பார்வையிட்டு மாணவர்களுக்கு தரமான முறையில் உணவு தயாரித்து வழங்கப்பட வேண்டும் என பொறுப்பாளர்களுக்கு அறிவுறுத்தினார்.

பின்னர் கூட்டுறவுபட்டியில் நாட்டுக் கோழி வளர்ப்புத் திட்டத்தின் கீழ் கோழி

வளர்ப்பு பண்ணையை பார்வையிட்ட அவர், பண்ணை உரிமையாளரிடம் அரசு மானியம் வழங்கப்படுவது குறித்து கேட்டறிந்தார். மேலும் நாட்டுக்கோழி வளர்ப்புத் திட்டத்தில் பங்குபெற விரும்புபவர்கள் தேவையான அளவு இடம் மற்றும் கோழி வளர்ப்பதற்கான ஆர்வம் உள்ளவர்களாக இருந்தால் இத்திட்டத்தின் கீழ் விண்ணப்பம் செய்து அரசு மானியம் பெற்று பயன்பெறலாம் என்றார்.

திருமண்பட்டியில் பகுதிநேர நியாய விலைக்கடையை பார்வையிட்டு, அங்கு விநியோகிக்கப்படும் உணவுப்பொருள்கள் இருப்பினை சரிபார்த்தார்.

நாமனூரில் விவசாய நிலத்தில் அமைக்கப்பட்டிருந்த சொட்டு நீர் பாசன முறை, மலம்பட்டியில் அமைக்கப்பட்டுள்ள பண்ணைக் குட்டையைப் பார்வையிட்டார். இந்த ஆய்வின் போது மாவட்ட ஆட்சியர் வே.ராஜாராமன் உடனிருந்தார்.

**பருவமழை பொய்த்ததால் கருகிய பயிர்களுக்கு இழப்பீடு வழங்க விவசாயிகள் கோரிக்கை**

விருதுநகர் மாவட்டம் காரியாபட்டி, திருச்சுழி, நரிக்குடி, வீரசோழன் பகுதிகளில் பருவமழை பொய்த்து போனதால் பயிர்கள் கருகி விட்டதால் இழப்பீடு வழங்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

காரியாபட்டி, திருச்சுழி, நரிக்குடி, இலுப்பையூர், விடத்தகுளம், மேலேந்தல், ஒட்டங்குளம் உள்ளிட்ட கிராமங்களை சேர்ந்த விவசாயிகள், பருவமழையை நம்பி தங்கள் நிலங்களை செம்மைப்படுத்தி வைத்திருந்தனர்.

பருவமழை பெய்யும் என்ற நம்பிக்கையில் விவசாயிகள் நெல் மற்றும் நிலக்கடலை பயிரிட்டிருந்தனர். ஆனால், பருவமழை பொய்த்து விட்டது. இதனால், பயிர்கள் அனைத்தும் கருகி வருகின்றன.

இதன் காரணமாக விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். மழை பொய்த்ததால், விடத்தகுளம், புதூர் ஆகிய கிராமங்களுக்கும் இடையை பொதுவான கண்மாய் வறண்டு மைதானமாக காட்சியளிக்கிறது. இந்த கண்மாய் தண்ணீரை நம்பி சுமார் 500 ஏக்கரில் பயிரிடப்பட்ட நெற்பயிரும் கருகி வருவது விவசாயிகளுக்கு மேலும் வேதனையை ஏற்படுத்தி உள்ளது.

இதுபற்றி திருச்சுழி விவசாய சங்கத் தலைவர் தனபாலன் கூறுகையில், திருச்சுழி, நரிக்குடி உள்ளிட்ட பல கிராமங்களில் பருவமழையை நம்பி பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தை செம்மைப்படுத்தி நிலக்கடலை, நெல் பயிரிட்டோம். செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் பெய்ய வேண்டிய பருவ மழை பெய்யாததால் பயிர்கள் முற்றிலும் கருகும் நிலை ஏற்பட்டுள்ளது. இதேநிலை நீடித்தால் விவசாயிகள் அனைவரும் கிராமத்தை காலி செய்து நகரங்களுக்கு செல்லவேண்டிய நிலை ஏற்படும்.

எனவே இப்பகுதி விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

**கால்நடை சிகிச்சை முகாம்**

காஞ்சிபுரம் அருகே நடந்த கால்நடை சிகிச்சை முகாமை வி. சோமசுந்தரம் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்.

காஞ்சிபுரம் மாவட்டத்தில் கால்நடைகள், கோமாரி உள்ளிட்ட நோய்களால் பாதிக்கப்படுவதாக, கால்நடை பராமரிப்புத் துறைக்கு புகார்கள் வந்த வண்ணம் இருந்தன.

இதனால் கடந்த 1 மாதமாகவே மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் சிறப்பு முகாம்களை நடத்தி கோமாரி நோய் தடுப்பூசிகளை போட்டு வருகிறது.

மேலும் கோமாரி தொடர்பான அறிகுறிகள் இருந்தால் உடனடியாக கால்நடை பராமரிப்புத் துறை அதிகாரிகளை தொடர்பு கொள்ள வேண்டும் என்று விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்போர் கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் காஞ்சிபுரம் சட்டப்பேரவை தொகுதிக்குள்பட்ட களியனூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் சிறப்பு கால்நடை மருத்துவ முகாம் நடைபெற்றது.

கால்நடை பராமரிப்பு மற்றும் லயன்ஸ் சங்கம் சார்பில் நடந்த இந்த முகாமை காஞ்சிபுரம் சட்டப்பேரவை தொகுதி உறுப்பினர் வி. சோமசுந்தரம் தொடங்கி வைத்தார்.

கால்நடை பராமரிப்புத் துறை உதவி இயக்குநர்கள் ராஜன், ஆன்டனி, லயன்ஸ் சங்கத் தலைவர் தியாகராஜன், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் படுநெல்லி தயாளன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**தாட்கோ மூலம் கடன் வாங்க 31-ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம்**

தாட்கோ மூலம் பழங்குடியினருக்கான பொருளாதார மேம்பாட்டு திட்டங்களுக்கு வரும் அக்டோபர் 31-ஆம் தேதி வரை விண்ணப்பிக்க காலநீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளதாக மாவட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது.

இது குறித்து மாவட்ட நிர்வாகம் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு: தாட்கோ மூலம் பழங்குடியினர்களுக்கு நிலம் மேம்பாடு திட்டம் - இருபாலருக்கும், தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம், இளைஞர்களுக்கான சுயவேலைவாய்ப்புத் திட்டம், மகளிர் சுயஉதவிக் குழுவினர்களுக்கான சுழல்நிதி, மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கான பொருளாதார கடனுதவி வழங்கப்பட உள்ளது.

மேற்கண்ட திட்டங்களுக்கு 50 சதவீதம் மானியம் வழங்கப்படும். விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் 2013 ஜுலை 1-ஆம் தேதி, 18 வயது நிரம்பியவராக இருக்க வேண்டும்.

குடும்ப ஆண்டு வருமானம் ரூ. 1 லட்சத்துக்குள் இருக்க வேண்டும். இத்தகுதி உடைய பழங்குடியினர் 2013 அக்டோபர் 10-ஆம் தேதி வரை விண்ணப்பிக்கலாம் என்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

இப்போது வரும் அக்டோபர் 31-ஆம் தேதி வரை விண்ணப்பிக்கும் வகையில் காலநீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

**மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு பேரணி, கருத்தரங்கம்**

காஞ்சிபுரம் பச்சையப்பன் மேல்நிலைப் பள்ளியில் மழைநீர் சேகரிப்பு குறித்த பேரணி மற்றும் கருத்தரங்கம் நடைபெற்றது.

காஞ்சிபுரம் பச்சையப்பன் மேல்நிலைப் பள்ளியில் என்.சி.சி. மாணவர்கள் சார்பில் மழைநீர் சேகரிப்பு குறித்த விழிப்புணர்வு கருத்தரங்கு நடைபெற்றது.

தலைமை ஆசிரியர் ராமநாதன் தலைமை வகித்தார். 3-வது பட்டாலியன் ஹாவில்தார் ரகு, பள்ளி உதவித் தலைமை ஆசிரியர் மற்றும் என்.சி.சி. முதல் நிலை அலுவலர் சந்திரசேகரன், மாணவர்கள் மதன்குமார், சந்துரு, சக்திபிரகாஷ் ஆகியோர் மழைநீர் சேகரிப்பின் அவசியம் குறித்து பேசினர்.

மழைநீர் சேகரிப்பின் அவசியம் குறித்த பேரணி நடைபெற்றது. நகரின் முக்கிய வீதிகளில் என்.சி.சி. மாணவர்கள் மழைநீர் சேகரிப்பின் அவசியம் குறித்து பிரசாரம் செய்தனர்.

மேலும் மழைநீர் சேகரிப்பு குறித்த விழிப்புணர்வு பதாகைகளை ஏந்திச் சென்றனர்.

**அனைத்து உரக் கடைகளிலும் விலைப் பட்டியல் வைக்க உத்தரவு**

திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து உரக் கடைகளிலும் விலைப் பட்டியலை விவசாயிகளின் பார்வைக்கு வைக்க வேண்டும் என மாவட்ட ஆட்சியர் கொ. வீரராகவ ராவ் உத்தரவிட்டார்.

திருவள்ளுர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்வு நாள் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இக்கூட்டத்தில், வேளாண்மை இணை இயக்குநர் சுந்தர், மாவட்டத்தின் மழை அளவு மற்றும் வேளாண் துறையில் செயல்படுத்தப்படும்

திட்டங்கள், விதை, இடுபொருள்கள் இருப்பு விவரங்களை விவசாயிகளுக்கு விளக்கினார்.


தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் பேசியது: மாவட்டத்தில் அனைத்து உரக் கடைகளிலும் உர நிறுவனத்தின் பெயர் மற்றும் விலைப் பட்டியலை விவசாயிகளின் பார்வைக்கு வைக்க வேண்டும்.

விவசாயிகள் உரம் வாங்கும்போது அதற்கான முறையான ரசீதை கடை உரிமையாளர்கள் வழங்க வேண்டும்.

வடமதுரை கிராமத்தில் ஏனம்பாக்கம் ஆற்றுக்கால்வாயில் உயர்வாக கட்டப்பட்டுள்ள கல்வெட்டை உயரம் குறைத்து மழைக் காலங்களில் தண்ணீர் வரத்து தடைபடாமல் இருக்க உதவி இயக்குநர், பஞ்சாயத்து மற்றும் பொதுப்பணித் துறை அதிகாரிகள் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்றார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் எ.ஜி. செல்வமணி, வேளாண்மை இணை இயக்குநர் சுந்தர், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) கோ. சுப்பிரமணியன், தோட்டக்கலை துணை இயக்குநர் நவநீதக்கண்ணன், துணை இயக்குநர் (வேளாண் வணிகம்) லேபாக்சீஸ்வர் மற்றும் அனைத்துத் துறை அலுவலர்கள் பங்கேற்றனர்.

**வங்கக் கடலில் புயல் சின்னம்: தமிழகத்தில் கனமழைக்கு வாய்ப்பு**



வங்கக் கடலில் தென் பகுதியில் புயல் சின்னம் உருவாகியுள்ளது. இதனால் அடுத்த இரு தினங்களில் கன மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

இலங்கை கடல் பகுதியில் ஏற்பட்டுள்ள வளி மண்டல மேல் அடுக்கு சுழற்சியின் காரணமாக தமிழகத்தில் கடந்த 2 தினங்களாக மழை பெய்து வருகிறது.

இப்போது வங்கக்கடலில் புதிதாக குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் உருவாகியுள்ளது. இது மேலும் வலுவடைந்து காற்றழுத்த தாழ்வு நிலையாக மாறும் வாய்ப்புள்ளது.

இது குறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியது: தென் வங்க கடலின் மத்திய பகுதியில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகியுள்ளது. இது தமிழகத்தில் இருந்து வெகு தொலைவில் நிலை கொண்டுள்ளதால் இது மேலும் வலுப்பெற்று தமிழகத்தை நோக்கி நகரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் தமிழகத்தில் அடுத்த 2 நாள்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது என்று அவர்கள் எச்சரிக்கை செய்துள்ளனர்.

தமிழகத்தில் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி நிலவரப்படி பதிவான மழையளவு(மில்லி மீட்டரில்): திண்டிவனம், மதுரை - 90, பாபநாசம், தஞ்சாவூர் - 80, நத்தம், அறந்தாங்கி - 70, ஒகேனக்கல், பூந்தமல்லி - 60, கிருஷ்ணகிரி - 50, வேதாரண்யம், பொள்ளாச்சி, காரைக்குடி, பாளையங்கோட்டை, மதுராந்தகம், கோவை, ஆத்தூர், சோழவந்தான் - 40, தளி, புதுச்சேரி, ஸ்ரீவைகுண்டம், நாகர்கோயில், சங்கரன்கோயில், குளச்சல், சிதம்பரம், அரக்கோணம், தாம்பரம் - 30, செஞ்சி, மன்னார்குடி, சென்னை, செய்யாறு, சத்தியமங்கலம், வந்தவாசி, கூடலூர், செம்பரம்பாக்கம், மேட்டுப்பாளையம், ராமேசுவரம், செங்கோட்டை, விழுப்புரம், ஆரணி, பட்டுக்கோட்டை, நெய்வேலி, ஸ்ரீபெரும்புதூர் - 20, அம்பாசமுத்திரம், மணிமுத்தாறு, ஏற்காடு, ஆண்டிப்பட்டி, கடலூர், காஞ்சிபுரம், சிவகங்கை, அரூர், பெருந்துறை, கொடைக்கானல், தென்காசி, பண்ருட்டி, திருப்பத்தூர், மகாபலிபுரம், கல்லணை, சீர்காழி, வால்பாறை, தூத்துக்குடி, திருத்தணி - 10.

**நிரம்புகிறது சாத்தையாறு அணை**



மதுரை மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக தொடர்ந்து பெய்து வரும் மழையால் சாத்தையாறு அணை நிரம்பிவருவதாக பொதுப்பணித் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

மதுரை நகர் மற்றும் ஊரகப் பகுதிகளில் கடந்த ஒருவாரமாக பலத்த மழை பெய்து வருகிறது. சனிக்கிழமை இரவு வரை பதிவான மழை விவரம் (மில்லி மீட்டரில்): மதுரை நகர் 47.2, வாடிப்பட்டி ஆண்டிப்பட்டி பங்களா 18, குப்பணம்பட்டி 8.2, சாத்தையாறு அணை 43, மேட்டுப்பட்டி 35, கள்ளந்திரி 29, சிட்டம்பட்டி 21, புலிப்பட்டி 26, மேலூர் 16, தனியாமங்களம் 29, விரகனூர் 43.

மதுரை நகரை விட ஊரகப் பகுதிகளில் மழை அளவு அதிகம் பதிவாகியுள்ளது. சோழவந்தான், வாடிப்பட்டி, அலங்காநல்லூர் பகுதிகளில் கடந்த 3 நாள்களாக தொடர்ந்து கனமழை பெய்துள்ளதால் கண்மாய்களில் நீர் மட்டம் உயர்ந்துள்ளது. அலங்காநல்லூர் பகுதியில் அறுவடைக்குத் தயாராக இருந்த நெல் வயல்களில் மழை நீர் தேங்கியிருப்பதாக விவசாயிகள் கவலை தெரிவித்தனர். மேலூர் பகுதியில் மழையால் முக்கிய கண்மாய்களுக்கு நீர் வரத்து அதிகரித்திருப்பதாகவும், இதனால் கண்மாய்கள் நிறைந்துவருவதாகவும் விவசாயிகள் கூறினர்.

பாலமேடு பகுதியில் உள்ள சாத்தையாறு அணையின் நீர்மட்டம் 29அடி ஆகும். அதில் 56 மில்லியன் கன அடி நீரைத் தேக்கலாம். ஆனால், தற்போது 8.9 அடி அளவுக்கு சகதியாக உள்ளது. இதனால் சகதிக்கு மேல்தான் நீர் தேங்கும். அதன்படி தற்போது 14 அடி நீர் மட்டம் உள்ளது. கடந்த ஆண்டு (2012)

அக்டோபரில் அணையின் நீர்மட்டம் 10 அடியே இருந்துள்ளது. ஆகவே, தற்போது நீர்மட்டம் கடந்த ஆண்டைவிட 4 அடி கூடுதலாக உள்ளது. என்றாலும், நீர்மட்டம் 20 அடியை தாண்டியபிறகே பாசனத்துக்கு தண்ணீர் திறப்பதற்கான வாய்ப்புள்ளதாக பொதுப்பணித்துறையினர் கூறினர்.

சாத்தையாறு அணையின் நீர்ப் பிடிப்புப் பகுதியில் சுமார் 700 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகின்றன. மேலும், குலமங்கலம், மதுரை வண்டியூர் கண்மாய்களுக்கும் அங்கிருந்து தான் நீர் வரத்து வரும். ஆகவே, சாத்தையாறு அணை நிரம்புவது மதுரை நகர் மற்றும் ஊரகப் பகுதிகளுக்கு பயனளிப்பதாக இருக்கும்.

தொடர் மழையால் வைகையிலும் தண்ணீர் அதிகரித்துள்ளது. ஆனால், ஆரப்பாளையம், செல்லூர், ஓபுளாப்படித்துறை தரைப்பாலங்களில் ஆகாயத்தாமரை அதிகளவில் வளர்ந்திருப்பதால் தண்ணீர் பரவலாக செல்லாமல் குறிப்பிட்ட பகுதியில் தேங்கிச்சென்றுவருகிறது. ஆகவே, ஆற்றில் வளர்ந்துள்ள ஆகாயத் தாமரையைச் சீரமைக்கவேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது.

**மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறப்பு குறைப்பு**

சேலம் மாவட்டம், மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு திறக்கப்படும் தண்ணீர் அளவு குறைக்கப்பட்டுள்ளது.

காவிரி டெல்டா மாவட்டங்களில் தற்போது மழை பெய்து வருவதால், மேட்டூர் அணையிலிருந்து டெல்டா பாசனத்துக்கு திறக்கப்படும் நீரின் அளவு விநாடிக்கு 3 ஆயிரம் கன அடியாகக் குறைக்கப்பட்டுள்ளது.

சனிக்கிழமை காலையில் விநாடிக்கு 13 ஆயிரம் கன அடி வீதம் திறந்து விடப்பட்ட தண்ணீர், மாலையில் 3 ஆயிரம் கன அடியாகக் குறைக்கப்பட்டது.

காவிரி ஆற்றின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மழை பெய்து வருவதால், நீர்வரத்து ஞாயிற்றுக்கிழமை காலை விநாடிக்கு 8,692 கன அடியாக அதிகரித்தது. ஞாயிற்றுக்கிழமை காலை மேட்டூர் அணையின் நீர்மட்டம் 80.86 அடியாகவும், நீர் இருப்பு 42.81 டி.எம்.சி.யாகவும் இருந்தது.

மேட்டூர் அணையிலிருந்து பாசனத்துக்கு திறக்கப்படும் நீரின் அளவு குறைக்கப்பட்டதால், நீர்மின் நிலையங்களில் மின் உற்பத்தியும் வெகுவாகக் குறைந்துள்ளது.

**கர்நாடகத்தில் பரவலாக மழை பெய்ய வாய்ப்பு**

கர்நாடகத்தில் பரவலாக மழை பெய்ய வாய்ப்புள்ளதாக அந்த மாநில இயற்கை பேரிடர் மேலாண்மை மையத்தின் இயக்குநர் பிரகாஷ் தெரிவித்தார்.

இதுகுறித்து பெங்களூருவில் ஞாயிற்றுக்கிழமை செய்தியாளர்களிடம் அவர் கூறியது:

கடந்த சனிக்கிழமை முதல் தென் கர்நாடகத்தில் பரவலாக மழை பெய்து வருகிறது. அடுத்த இரண்டொரு நாள்களில் மாநிலம் முழுவதும் தென் கிழக்கு பின் பருவ மழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

நவம்பர் முதல் வாரம் வரை இந்த மழை நீடிக்கும் எனத் தெரிகிறது. தமிழகத்தில் தொடர்ந்து மழை பெய்ய வாய்ப்புள்ளதால், கர்நாடகத்தில் வானிலை பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும்.

குடகு, மைசூர், சாம்ராஜ்நகர் ஆகிய மாவட்டங்களில் அதிக அளவில் மழை பெய்து வருகிறது. பெங்களூருவிலும் இரண்டொரு நாள்களில் இரவு நேரங்களில் பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளது என்றார் அவர்.

**25-ல் விவசாயிகள் குறைகேட்புக் கூட்டம்**

விவசாயிகள் குறைகேட்புக் கூட்டம் வரும் 25ஆம் தேதி கடலூரில் நடைபெற உள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் அலுவலக செய்திக்குறிப்பு: விவசாயிகள் குறைகேட்பு மற்றும் ஆலோசனைக் கூட்டம் வரும் 25ஆம் தேதி காலை 10.30 மணிக்கு, கடலூரில் உள்ள மாவட்ட வளர்ச்சி மன்றக் கூடத்தில் ஆட்சியர் ரா.கிர்லோஷ்குமார் தலைமையில் நடைபெறுகிறது.

கூட்டத்தில் விவசாயிகள், தங்களின் வேளாண் சார்ந்த குறைகளைத் தெரிவிக்க அனைவருக்கும் வாய்ப்பு வழங்கப்படும். கோரிக்கைகளைத் தெரிவிக்க

விவசாயிகள் அன்று காலை 10.30 மணிக்குள், பெயர் மற்றும் கோரிக்கை வைக்கவுள்ள துறையின் பெயர் உள்ளிட்ட விவரங்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

கோரிக்கைகளை மனுக்களாகவும் வழங்கலாம். இக்குறைகள் குறித்து துறையின் உயர் அதிகாரிகளின் உரிய பதில் அளிக்கவும், தொடர் நடவடிக்கை எடுக்கவும் அறிவுறுத்தப்படும் என்று ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

**மாவட்டத்தில் பரவலாக மழை: விவசாயிகள் மகிழ்ச்சி**

கடலூர் மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளில் சனிக்கிழமை இரவு மழை பெய்ய தொடங்கியது. ஞாயிற்றுக்கிழமை காலை வரை இடைவிடாது மழை பெய்துகொண்டே இருந்தது.  கடலூர் நகரில் மாலையிலும் மழை பெய்தது.

மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி வரை பெய்த மழை அளவு விவரம் (மில்லி மீட்டரில்): பரங்கிப்பேட்டை 75, அண்ணாமலைநகர் 23.20, ஸ்ரீமுஷ்ணம் 22, கொத்தவாச்சேரி 21, சிதம்பரம் 20, வானமேதேவி 18.80, கடலூர் 13.40, சேத்தியாத்தோப்பு 12.20, பண்ருட்டி 11, புவனகிரி 9, காட்டுமன்னார்கோயில், கீழச்செருவாய், குப்பநத்தம் 3, விருத்தாசலம் 2.20 மில்லி மீட்டர் மழை பதிவாகியுள்ளது.

பண்ருட்டியில்

பண்ருட்டி மற்றும் அண்ணாகிராமம் வட்டாரத்தில் சனிக்கிழமை முதல் பரவலாக மழை பெய்து வருவதால் சம்பா நெல் பயிர் செய்யும் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இதுபோல் தொடர்ந்து மழை பெய்தால் ஏரிகளிலும் நீர்மட்டம் உயரும், நிலத்தடி நீர்மட்டமும் உயர்ந்து விவசாயப் பயன்பாட்டுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என அவர்கள் தெரிவித்தனர்.

மானாவரி உளுந்து விதைப்புக்கு ஏற்ற பட்டம் எனவும், சம்பா நெல் நடவுக்கு பயனுள்ளதாக இருக்கும் என பண்ருட்டி வேளாண்மை உதவி இயக்குநர் ஏ.சங்கர் தெரிவித்தார்.

முந்தரி கன்று: தானே புயலால் பாதிக்கப்பட்ட முந்திரி விவசாயிகளுக்கு விஆர்ஐ-3 வீரிய ரக ஒட்டு கன்று தயாராக உள்ளது தேவைப்படுவோர் தோட்டக்களை உதவி இயக்குநரை தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம் என தொட்டக்கலை துறை உதவி இயக்குநர் எஸ்.வேல்விழி தெரிவித்தார். அண்ணாகிராமம் வட்டாரத்தில் காய்கறி பயிர்களுக்கு உகந்த மழை என தோட்டக்கலை உதவி இயக்குநர் பிரேமா கூறினார்.

**புதுகையில் வேளாண் பல்கலைக்கழகம் அமைக்க வேண்டும்**

புதுக்கோட்டை மாவட்டத்தில் வேளாண் பல்கலைக்கழகம் அமைக்க வேண்டுமென தமிழ்நாடு அரசு மற்றும் வேளாண்மை பல்கலைக்கழக ஏஐடியுசி பண்ணை தொழிலாளர்கள் சங்க மாநில மாநாட்டில் வலியுறுத்தப்பட்டது.

புதுக்கோட்டையில் ஞாயிற்றுக்கிழமை மாநிலத் தலைவர் சி. சந்திரகுமார் தலைமையில் நடைபெற்ற மாநில கோரிக்கை மாநாட்டில் இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும், பண்ணைத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் தினக்கூலியில் மாவட்டத்துக்கு மாவட்டம் உள்ள ஊதிய முரண்பாட்டைக் களைய வேண்டும். தினக்கூலியாகப் பணிபுரிந்து வரும் பண்ணைத் தொழிலாளர்கள் அனைவரையும் நிரந்தரம் செய்ய வேண்டும். நிரந்தரப்படுத்தப்பட்ட பண்ணை தொழிலாளர்களுக்கான தொகுப்பூதியத்தை காலமுறை ஊதியமாக வழங்க வேண்டும்.

பல்கலைக்கழகப் பண்ணைகளுக்கு ஆராய்ச்சி மற்றும் பயிற்சிகளுக்குப் போதுமான நிதியை ஒதுக்க வேண்டும். புதுக்கோட்டை மாவட்டத்தில் வேளாண் சார்ந்த 5 பண்ணைகள் உள்ளன. அத்துடன் வேறு எந்த மாவட்டத்திலும் இல்லாத கட்டமைப்பு வசதிகள் உள்ளதால், வேளாண் ஆராய்ச்சியை ஊக்குவிக்கும் விதமாக புதுக்கோட்டை மாவட்டத்தில் புதிய வேளாண் பல்கலைக்கழகம் அமைக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

முன்னதாக, மாநில பொறுப்புச் செயலர் உ. அரசப்பன் வரவேற்றார்.

ஏஐடியுசி பொதுச் செயலர் டி.எம். மூர்த்தி, திருத்துறைப்பூண்டி சட்டப்பேரவை உறுப்பினர் கே. உலகநாதன், பண்ணைத் தொழிலாளர்கள் சங்க மாநில பொதுச் செயலர் அ. பாஸ்கர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்டச் செயலர் த.

செங்கோடன், ஏஐடியுசி மாவட்டச் செயலர் வீ. சிங்கமுத்து, மாவட்டத் தலைவர் கே.ஆர். தர்மராஜன், பண்ணைத் தொழிலாளர் சங்க நிர்வாகிகள் உள்ளிட்டோர் பேசினர்.

இதில், தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த பண்ணைத் தொழிலாளர்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

**தஞ்சாவூரில் 80.2 மி.மீ. மழை**

தஞ்சாவூர் மாவட்டத்தில் அதிகபட்சமாக தஞ்சாவூரில் 80.2 மி.மீ. மழை பெய்தது.

மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணிநேரத்தில் பெய்த மழையளவு (மில்லிமீட்டரில்): தஞ்சாவூர் 80.2, பாபநாசம் 36, பட்டுக்கோட்டை 16.2, கல்லணை 10.6, ஈச்சன்விடுதி 9.2, கும்பகோணம் 7.4, பேராவூரணி 7.2, அதிராம்பட்டினம் 6.4, அய்யம்பேட்டை 6, திருவையாறு 5, பூதலூர் 4.8, திருக்காட்டுப்பள்ளி 4.2, வல்லம் 3.5, குருங்குளம் 3, மதுக்கூர், மஞ்சலாறு, வெட்டிக்காடு தலா 2.2, நெய்வாசல் தென்பாதி 1.4, கீழணை 1.

**பாசனத்திற்கு தண்ணீர் திறப்பு**

தருமபுரி மாவட்டம், கே.ஈச்சம்பாடி அணையிலிருந்து ஞாயிற்றுக்கிழமை பாசனத்திற்காக தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

அரூர் அருகே உள்ள கே.ஈச்சம்பாடி அணையிலிருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிட தமிழக அரசு உத்தரவிட்டிருந்தது.

இதையடுத்து, ஞாயிற்றுக்கிழமை அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடும் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சியில் மாநில உயர் கல்வித் துறை அமைச்சர் பி.பழனியப்பன் பங்கேற்று அணையின் வலது மற்றும் இடதுபுறக் கால்வாயிலிருந்து தண்ணீரைத் திறந்து விட்டுப் பேசியது: ஈச்சம்பாடி அணையிலிருந்து திறந்து விடப்பட்டுள்ள தண்ணீர், தருமபுரி மாவட்டம் அரூர் பகுதியில் 10 கிராமங்களிலும், கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை பகுதியில் உள்ள 21 கிராமங்களிலும் உள்ள 6,250 ஏக்கர் விளை நிலங்கள் பாசன வசதி பெற

உள்ளன. அணையின் உயரம் 17.35 அடியாகும். 3.70 கோடி கன அடி கொள்ளளவு கொண்ட இந்த அணையின் வலது மற்றும் இடதுபுறக் கால்வாயிலிருந்து நொடிக்கு 35 கன அடி தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது. எனவே, இரு மாவட்ட விவசாயிகளும் இந்தத் தண்ணீரை நல்ல முறையில் பயன்படுத்தி சாகுபடி செய்து பயன்பெற வேண்டும் என்றார் அமைச்சர்.

இந்த நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியர் கே.விவேகானந்தன், சட்டப்பேரவை உறுப்பினர்கள் (அரூர்) பி.டில்லிபாபு, (பாலக்கோடு) கே.பி.அன்பழகன், மாவட்ட வருவாய் அலுவலர் ப.ராமர், மாவட்ட ஊராட்சித் தலைவர் டி.ஆர்.அன்பழகன், பொதுப்பணித் துறை செயற்பொறியாளர் என்.பாலசுப்பிரமணியன், உதவிப் பொறியாளர்கள் பாலாமணி, கிருபா, வேளாண் இணை இயக்குநர் பொ.மனோகரன் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**இலவச கால்நடை மருத்துவ முகாம்**

ஆம்பூர் ரோட்டரி சங்கம், சென்னை அண்ணா நகர் ஆதித்யா ரோட்டரி சங்கம் சார்பில் ரெட்டிமாங்குப்பம் கிராமத்தில் இலவச கால்நடை மருத்துவ முகாம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது .

ஆம்பூர் ரோட்டரி சங்கத் தலைவர் செந்தில்குமார் தலைமை வகித்தார். செயலர் மனோஜ்குமார், முன்னாள் தலைவர் ஏ.ஆர்.ரமேஷ்பாபு, வினுடேவிட், சென்னை ரோட்டரி சங்கத்தின் தலைவர் விஜயகுமார், சங்கரன் உள்பட பலர் கலந்து கொண்டனர். சுமார் 400 கால்நடைகளுக்கு பரிசோதனை செய்து சிகிச்சை அளிக்கப்பட்டது

**மின் உற்பத்தி இயந்திரம் பழுது:முழு கொள்ளளவில் சோலையாறு அணை**

சோலையாறு மின் நிலையத்தில் இயந்திரம் பழுதாகி இருப்பதால் சோலையார் அணையின் நீர்மட்டம் 4 மாதங்களாக முழு கொள்ளளவிலேயே உள்ளது.

வால்பாறை பகுதியில் தென்மேற்கு பருவ மழை இந்த வருடம் அதிகளவில் பெய்தது. மழை தொடர்ந்து பெய்து வந்ததால் 160 அடி கொள்ளளவு கொண்ட

சோலையாறு அணையில் இருந்து மின் உற்பத்திக்காக தொடர்ந்து தண்ணீர் வெளியேற்றப்பட்டது.

அணையில் இருந்து மானாம்பள்ளி எஸ்டேட், சோலையாறு மின் நிலையத்தில் உள்ள இரண்டு இயந்திரங்கள் மூலமாக தினசரி 70 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு வந்தது. இதில் ஒரு இயந்திரம் பழுதானதால் கடந்த ஒரு வருடமாக ஒரு இயந்திரம் மூலமாக 35 மெகாவாட் மின்சாரம் மட்டுமே உற்பத்தி செய்யப்படுகிறது.

இரண்டு இயந்திரத்திலும் மின் உற்பத்தி நடைபெற்றால், அணையில் இருந்து அதிகளவில் தண்ணீர் வெளியேற்றப்பட்டு நீர்மட்டமும் 160 அடிக்கு கீழ் குறைந்திருக்கும். ஆனால் ஒரு இயந்திரம் மட்டும் செயல்படுவதால் குறைந்த அளவு தண்ணீர் மட்டுமே வெளியேற்றப்பட்டு கடந்த 4 மாதங்களாக, அணை முழு கொள்ளளவான 160 அடியிலேயே உள்ளது.

ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில், அணைக்கு நீர்வரத்து 814 கனஅடியாக இருப்பதால், மின் உற்பத்திக்காக 388.08 கனஅடி மற்றும் சேடல்டேம் வழியாக பரம்பிக்குளத்திற்கு 385.88 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. அணையின் நீர்தேக்கப் பகுதிகள் முழுவதிலும் தண்ணீர் தேங்கி கடல் போல் இருக்கும் காட்சி இப்பகுதிக்கு வரும் சுற்றுலாப் பயணிகளை வெகுவாக கவர்வதாக உள்ளது.

**தெப்பக்குளத்துக்கு வைகையிலிருந்து தண்ணீர்**

மதுரை தெப்பக்குளத்தை நிரப்புவதற்காக, வைகை ஆற்றிலிருந்து மின்மோட்டார் மூலம் மழை நீர் கொண்டு வரப்படுகிறது.

மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலுக்குச் சொந்தமான தெப்பக்குளம், விரகனூர் செல்லும் வழியில் உள்ளது. இதன் வடக்குக் கரையில் அருள்மிகு மாரியம்மனும், மேற்குப் பகுதியில் முக்தீஸ்வரர் திருக்கோயிலும் உள்ளன.

திருமலை நாயக்கரால் கி.பி. 1645 இல் இக்குளம் அமைக்கப்பட்டது. சுமார் 305 மீட்டர் நீளமும், 290 மீட்டர் அகலமும் உடைய இக் குளம், சுமார் 10 மீட்டருக்கும் மேல் ஆழமுடையது. தெப்பக்குளத்தின் மைய மண்டபம் மிகவும் அழகுற அமைக்கப்பட்டுள்ளது.

ஜனவரி மாதம் நடைபெறும் அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் தெப்பத் திருவிழா இங்கு விமரிசையாக நடைபெறுவது வழக்கம். மழை நீர் சேகரிப்பு அமைப்பு, நீர் வெளியேறும் அமைப்பு என நவீன தொழில்நுட்பத்துக்கே சவால் விடும் வகையில் இத் தெப்பக்குளம் அமைந்துள்ளது. ஆனால், மாநகராட்சி நிர்வாகங்கள் தெப்பத்தில் நீர்த் தேக்க போதிய அக்கரை செலுத்தாத காரணத்தால், தெப்பம் வறண்டே காணப்படுகிறது.

தெப்பத்தில் நிரந்தரமாக நீர் நிரப்பினால் பல லட்சம் பேருக்கான நிலத்தடி நீர் ஆண்டுதோறும் கிடைக்கும். தெப்பத்துக்கு நீர் வரும் வகையில் ஏ.வி. பாலம் கீழ்ப் பகுதியில் இருந்து கால்வாய் அமைக்கப்பட்டுள்ளது. ஆனால், அதை சரிவர பராமரிக்காததால், அது தற்போது கழிவுநீரோடையாகிவிட்டது.

தற்போது, மதுரையில் நல்ல மழை பெய்து வருகிறது. ஆனால், காமராஜர் சாலையில் தேங்கும் மழை நீர் தெப்பத்தில் விழும் வகையில் மாநகராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுக்காமல் உள்ளது, மக்களிடையே ஏமாற்றத்தை அளித்துள்ளது.

இந்நிலையில், தற்போது அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் நிர்வாகம் சார்பில், வைகை ஆற்றிலிருந்து மின்மோட்டார் மூலம் மழை நீரை தெப்பத்தில் தேக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இரு நாள்களாக காலை, மாலை வேளையில் வைகை ஆற்றிலிருந்து தண்ணீர் குழாய் மூலம் கொண்டு வரப்படுகிறது.

கடந்த ஆண்டு ஜனவரி மாதம் தெப்பத்தில் தண்ணீர் இல்லை. இதனால், தெப்பத் திருவிழாவின்போது நிலைத் தெப்பமே பயன்படுத்தும் கட்டாயம் ஏற்பட்டது. எனவே, வரும் ஜனவரியில் நடக்கும் தெப்பத் திருவிழாவுக்கான தண்ணீரை நிரப்பும் வகையில், தற்போது மின்மோட்டார் மூலம் வைகை ஆற்றிலிருந்து

தண்ணீர்  கொண்டு வரப்படுவதாக, திருக்கோயில் இணை ஆணையர் பி. ஜெயராமன் தெரிவித்தார்.

கடந்த சில நாள்களாக பெய்துவரும் மழையால், வைகையில் அதிகளவு தண்ணீர் ஓடுகிறது. ஆனால், 45 நாள்களுக்கு மேலாக வைகையிலிருந்து தண்ணீர் கொண்டு சென்றாலே, தெப்பத்தில் 6 அடிக்கும் மேலாக தண்ணீர் நிரம்பும் வாய்ப்புள்ளதாகவும் கூறப்படுகிறது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**21.10.2013**

## பயிர்களை காப்பாற்ற தண்ணீரை விலை கொடுத்து பாய்ச்சும் அவலநிலை

பாவூர்சத்திரம்:பாவூர்சத்திரம் தென்பகுதியில் கடும் வறட்சி நிலவி வருவதால் விவசாயத்திற்கு டேங்கர் லாரியில் தண்ணீரை விலைக்கு வாங்கி செடிகளுக்கு பாய்ச்சும் அவல நிலை ஏற்பட்டுள்ளது.கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு தென்மேற்கு பருவ மழை அதிக அளவு பெய்ததால் சிற்றாற்றின் பாசன பகுதிகள் செழித்தது. ஆனால் பழைய குற்றாலம் ஜம்புநதி மலைப்பகுதிகளில் போதிய மழை இல்லாததால் பழைய குற்றாலம் ஜம்புநதி தண்ணீரை நம்பி உள்ள பாவூர்சத்திரம் தெற்கு பகுதிகளான அரியபுரம், ஆவுடையானூர், திப்பணம்பட்டி, நாட்டார்பட்டி, சென்னெல்தாபுதுகுளம், பூவனூர், சிவநாடானூர், மடத்தூர், கல்லூரணி, செட்டியூர், சிவகாமிபுரம், பெத்தநாடார்பட்டி, கரிசலூர் ஆகிய பகுதிகளில் கடும் வறட்சி ஏற்பட்டுள்ளது. இதனால் கிணறு மற்றும் ஆழ்குழாய் கிணறுகளில் நீர் மட்டம் வெகுவாக குறைந்துவிட்டதால் விவசாயம் மற்றும் குடிநீருக்கு பெரும் தட்டுபாடு நிலவுகிறது. விவசாயிகள் தங்கள் பயிர்களை காப்பாற்ற டேங்கர் லாரிகளில் தண்ணீரை விலைக்கு வாங்கி பாய்ச்சுகின்றனர் குறிப்பாக தென்னை, வாழை மற்றும் ரோஸ், முல்லை, பிச்சி போன்ற பூ பயிர்களை காப்பாற்ற விவசாயிகள் படாதபாடு படுகின்றனர். சிவகாமிபுரம் பகுதியில் பூ விவசாயிகள் தண்ணீரை விலைக்கு வாங்கி பாய்ச்சுகின்றனர் இதுபற்றி பூ விவசாயி முருகன் கூறியதாவது: ரூ.30 ஆயிரம் செலவு செய்து முல்லைப் பூ நடவு செய்தேன். கிணற்றில் தண்ணீர் இல்லாததால் பூ செடிகள் பட்டுப்போகும் நிலை ஏற்பட்டது. இதனால் டேங்கர் லாரியில் தண்ணீரை விலைக்கு வாங்கி பாய்ச்சுகின்றேன். ஒரு லாரி தண்ணீருக்கு ஆயிரம் ரூபாய் ஆகிறது. ஒரு முறை தண்ணீர் பாய்ச்ச ரூ.3 ஆயிரம் செலவாகிறது. மழை வரும் வரை இதுதான் நிலை என்றார். பாவூர்சத்திரம் தெற்கு பகுதியில் கடும் வறட்சி நிலவுவதால் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் பெரும் வேதனையடைந்துள்ளனர்.

### விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

விருதுநகர் : விருதுநகர் கலெக்டர் அலுவலகம் அருகே, கருகிய தென்னைக்கு ஏக்கருக்கு 50 ஆயிரம் நிவாரணம் வழங்க கோரி, விவசாயிகள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். மாவட்ட செயலாளர் சிங்கராஜா தலைமை வகித்தார். ஜெயபால், அண்ணாமலை, விஜயமுருகன், குருசாமி, ராமச்சந்திர ராஜா உள்ளிட்ட பலர் பேசினர்.

### சொட்டு நீர் பாசனத்தில் பப்பாளி

கிருஷ்ணகிரி: சொட்டு நீர் பாசனம் மூலம் பப்பாளி சாகுபடி செய்யும் பரப்பு ஆண்டுக்கு, ஆண்டு அதிகரித்துள்ளது.சர்க்கரை நோய் மற்றும் வயிறு சம்மந்தமான நோய்களை குணப்படுத்தும் மருத்துவ குனம் உள்ள பப்பாளி பழத்துக்கு பொதுமக்களிடையே நல்ல வரவேற்பு கடந்த சில ஆண்டுகளாக ஏற்பட்டுள்ளது.ராம புறங்களில் வீட்டுக்கு அருகில் மட்டும் வளர்க்கப்பட்டு வந்த நாட்டு பப்பாளி செடிகளில் இருந்து பறிக்கப்படும் காய்கள் விற்பனை செய்யப்பட்டு வந்த நிலையில், நாளுக்கு நாள் பப்பாளி பழத்தின் தேவை அதிகரிக்க துவங்கியதை அடுத்து, தற்போது வீரிய ஒட்டுரக பப்பாளி செடிகளை விவசாயிகள் தங்கள் நிலங்களில் சாகுபடி செய்து வருகின்றனர்.கிருஷ்ணகிரி மாவட்டத்தில் குறிப்பாக மகாராஜகடை மற்றும் வரட்டனப்பள்ளியை சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள விவசாயிகள் தங்கள் நிலங்களில் சொட்டு நீர் பாசனம் மூலம் வீரிய ஒட்டுரக பப்பாளி செடிகளை கடந்த, நான்கு ஆண்டுகளாக சாகுபடி செய்து வருகின்றனர்.ஒரு விதை, 10 ரூபாயுக்கு வாங்கும் விவசாயிகள், ஒரு ஏக்கரி,ல் ஆயிரம் செடிகளை நட்டு வைத்து வளர்க்கின்றனர். ஆறு மாதத்திற்கு பிறகு அறுவடைக்கு வரும் பப்பாளி காய்களை மொத்த வியாபாரிகள் மூலம் ஆந்திர மாநிலத்தில் உள்ள ஜூஸ் பாக்டரி மற்றும் சென்னை, கர்நாடகா மாநிலம் பெங்களூரு மார்க்கெட்டுக்கு விற்பனைக்கு அனுப்புகின்றனர்.பப்பாளி சாகுபடியில் கூலி ஆட்கள் தேவை குறைவாக உள்ளது. மேலும், மற்ற பயிர்களை போலவே பப்பாளியும் சொட்டுநீர் பாசனம் மூலம் சாகுபடி செய்யப்படுவதால் தண்ணீர் பிரச்சனை இல்லாமல் உள்ளது.பொதுவாக மாகாராஜகடை மற்றும் வரட்டனப்பள்ளி சுற்றுவட்டார பகுதியில் அனைத்து விவசாயிகளும் கிணற்று

பாசனைத்தை மட்டுமே நம்பியுள்ளர். நெல், கரும்பு,வாழை, மஞ்சள் பயிர்களுக்கு அதிக தண்ணீர் தேவைப்படுவாதல், குறைந்த அளவே தண்ணீர் வருமானம் கொடுக்கும் பப்பாளி சாகுபடிக் இப்பகுதி விவசாயிகள் மாறியுள்ளனர்.இதனால் பப்பாளி சாகுபடி செய்யப்படும் பரப்பு ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்துள்ளது. இந்த பகுதியில் கடந்த ஆண்டு, 200 ஏக்கரில் பப்பாளி சாகுபடி செய்யப்பட்டது. தற்போது, 500 ஏக்கராக அதிகரித்துள்ளது.ஒரு கிலே,ா ஐந்து ரூபாய் முதல், ஏழு ரூபாய் வரை மொத்த விற்பனையாளர்கள் தோட்டத்திலே வந்து காய்களை எடுத்து செல்கின்றனர். இதன் மூலம் வாரத்துக்கு ஏக்கருக்கு, 10 ஆயிரம் ரூபாய் விவசாயிகளுக்கு கிடைக்கிறது. மற்ற பயிர்களை காட்டிலும் பப்பாளி சாகுபடிக்கு செலவு குறைவு என்பதால் விவசாயிகளுக்கு கூடுதல் லாபம் கிடைத்து வருகிறது.

### தொடரும் மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி

கிருஷ்ணகிரி: கடந்த சில தினங்களாக, தொடர்ந்து பெய்து வரும் மழையால் மானாவாரியாக, சிறு தானியங்களை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழை சராசரி அளவுக்கு அதிகமாக பெய்தாலும், வானம் பார்த்த பூமி உள்ள பகுதிகளான வேப்பனப்பள்ளி, பர்கூர், மத்தூர், போச்சம்பள்ளி, ஊத்தங்கரை ஆகிய பகுதிகளில் கிணறுகளில் நீர்மட்டம் உயரவில்லை.கடந்த சில மாதங்களாக இந்த பகுதியில் பெய்த மழையை அடுத்து விவசாயிகள் மானாவாரி நிலங்களில், பச்சைபயிறு, உளுந்து, காராமணி போன்ற சிறு தானியங்களை விதைத்தனர்.அவ்வப்போது பெய்து வரும் மழையால் செடிகள் வளர்ந்து தற்போது காய்கள் காய்க்கும் நிலையில் உள்ளது. இந்நிலையில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நேற்று முன்தினம்(அக்., 19) இரவு பரவலாக இடி மின்னலுடன் மழை பெய்தது. கிருஷ்ணகிரியில் நேற்று(அக்., 20) காலை, 7 மணி முதல், 8 மணிவரை கன மழை பெய்தது. இதனால் சாலைகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. மழை நீரில் சாக்கடை நீரும் கலந்து கொண்டதால் கிருஷ்ணகிரி நகரின் மையப்பகுதியான ரவுண்டனாவில் மழை நீர் ஏரி போல் தேங்கி நின்றது.இதனால் சேலம் சாலை, பெங்களூரு சாலை, சப்-ஜெயில் ரோடு, சென்னை சாலை, குப்பம் சாலையில்

வாகனங்கள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. மழை விட்டு, ஒரு மணி நேரத்துக்கு மேலான பின் தண்ணீர் வற்றத் தொடங்கியது.மாவட்டத்தில் அதிகபட்சமாக கிருஷ்ணகிரியில், 50.20 மி.மீ., மழை பெய்தது. இதனையடுத்து தளியில், 35 மி.மீ., , பெனுகொண்டாபுரத்தில், 24.20 மி.மீ., ராயக்கோட்டை, 19 மி.மீ., தேன்கனிக்கோட்டை, 13.30மி.மீ, போச்சம்பள்ளி, 6.20மி.மீ., ஊத்தங்கரை, 2மி.மீ., பாரூர் மற்றும் நெடுங்கல்லில், 1.20 மி.மீ., மழை பதிவானது.

இதில் குறிப்பாக மத்தூர், பர்கூர், வேப்பனப்பள்ளி, போச்சம்பள்ளி பகுதியில் இரவு முழுவதும் விட்டு விட்டு மழை பெய்ததால் இப்பகுதிகளில் விதைத்திருந்த சிறுதானிய பயிர்களுக்க ஈரப்பதம் அதிகரித்து நன்கு விளைய வாய்ப்புள்ளதால், சிறுதானிய பயிர்களை விதைத்திருந்த விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.இதனிடையே கிருஷ்ணகிரி சுற்றுவட்டார பகுதியில் பெய்த கன மழையால் அவதானபட்டி ஏரிக்கு கீழ் பகுதியில் சாகுபடி செய்யப்பட்டிருந்த நெல் பயிர்கள் சேதமாக கீழே விழுந்தது. கதிர் முற்றும் பருவத்தில் பயிர்கள் சேதமடைந்ததால் நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் பயிரை காப்பாற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

## கொப்பரை தேங்காய்ரூ.46 லட்சத்துக்கு ஏலம்

பெருந்துறை: பெருந்துறை, வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த ஏலத்தில், 46 லட்சம் ரூபாய்க்கு கொப்பரை தேங்காய்கள் ஏலம் போனது.பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், வாரம் தோறும் புதன் மற்றும் சனிக்கிழமைகளில் கொப்பரை தேங்காய் ஏலம் நடந்து வருகிறது.நேற்று முன்தினம் நடந்த ஏலத்துக்கு, பெருந்துறை மற்றும் சுற்றுப்புறப்பகுதியில் இருந்து விவசாயிகள், 1,574 மூட்டைகளில், 78 ஆயிரம் கிலோ கொப்பரை தேங்காய்களை கொண்டு வந்திருந்தனர்.

இதில், முதல் தரம் கொப்பரை தேங்காய் குறைந்தபட்ச விலையாக, கிலோ ஒன்று, 64 ரூபாய்க்கும், அதிகபட்சவிலையாக, 66.75ரூபாய்க்கு விற்பனையானது. 2ம் தரம் கொப்பரை தேங்காய் குறைந்தபட்ச விலையாக கிலோ ஒன்று, 55.80

ரூபாய்க்கும், அதிகபட்சவிலையாக, 60.65 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தம், 46 லட்சம் ரூபாய்க்கு தேங்காய்கள் ஏலம் மூலம் விற்பனையானது.இத்தகவலை சங்க தலைவர் அருள்ஜோதிசெல்வராஜ் தெரிவித்தார்.

### முருங்கை விலை உயர்வுவிவசாயிகள் மகிழ்ச்சி

வெள்ளகோவில்: வெள்ளகோவில் வாரச்சந்தையில், முருங்கை விலை, 50 கிலோ மூட்டை, 2,000 ரூபாய்க்கு விற்றதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். தவிர, தக்காளி ஒரு கிலோ, 30 ரூபாய்க்கு விற்கப்பட்டது.ஒரு கிலோ பெரியவெங்காயம், சிறியது, 60 ரூபாய், பெரியது, 70 ரூபாய், கேரட், 40 ரூபாய், சின்னவெங்காயம், 70 ரூபாய், பீன்ஸ், 40 ரூபாய், கத்தரிக்காய், 30 ரூபாய், பீர்க்கன்காய், 30 ரூபாய், புடலங்காய், 30 ரூபாய், பாகற்காய் மற்றும் முட்டைகோஸ், 30 ரூபாய், உருளைக்கிழங்கு, 30 ரூபாய்க்கு விற்பனையானது.கடந்த, 15 நாட்களுக்கு முன், ஞாயிறு வாரச்சந்தையில், 1,200 ரூபாய்க்கு விற்ற முருங்கைக்காய், நேற்று, 2,000 ரூபாய்க்கு விற்பனையானது. மரமுருங்கை, ஒரு கிலோ, 40 ரூபாய்க்கும், செடிமுருங்கை ஒரு கிலோ, 50 ரூபாய்க்கும் விற்கப்பட்டது.

### தென்னையை தாக்கும் வண்டுப்பூச்சிஅழிக்க வேளாண் அதிகாரி யோசனை

குளித்தலை: "தென்னையை தாக்கும் சிகப்பு கூன் வண்டு பூச்சிகளை கட்டுப்படுத்திட, விவசாயிகள் உரிய மருந்துகளை முறையாக பயன்படுத்தி வேண்டும்' என, தோகைமலை தோட்டக்கலை உதவி இயக்குனர் தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:தென்னை மரத்திலுள்ள ஓட்டைகளில் சிகப்பு கூன் வண்டு தாக்கியதால், பஞ்சு போன்ற கழிவுகள் காணப்படும். செம்பழுப்பு நிற திரவமும், இந்த ஓட்டைகள் மூலமாக கசிந்து கொண்டிருக்கும். தென்னை மரத்தில் காதை வைத்து கேட்டால், சிகப்பு கூன் வண்டு புழுக்களின் நடமாட்டத்தை நன்கு கேட்கலாம். பாதிக்கப்பட்ட மரத்தை தட்டினால், பொத்தென்று சத்தம் கேட்கும்.பெரும்பாலும், ஒன்று முதல், 20 வயதுக்குட்பட்ட தென்னை மரங்கள் அதிக அளவில் சிகப்புக் கூன் வண்டால்

தாக்கப்படுகின்றன. சிகப்பு கூன் வண்டு பழுப்பு நிறத்தில், உருண்டை வடிவில் நீண்ட வளைவான மூக்கு பகுதியுடன் காணப்படும். தென்னை மரத்தின் சேதப்படுத்தப்பட்ட தண்டு பகுதியில், பெண் வண்டு முட்டைகள் இருக்கிறது. இதிலிருந்து வெளிவரும் புழுக்கள், தென்னை மரத்தின் மிருதுவான பகுதியையும், நுனிப் பகுதியையும் உண்டு சேதப்படுத்துகிறது. இதனால் மரம் இறந்து விடும் வாய்ப்பும் உண்டாகிறது.தென்னந்தோப்பை சுத்தமாக வைக்க வேண்டும். மரத்தின் மீது கத்தி அல்லது அரிவாள் கொண்டு சேதப்படுத்தக்கூடாது. மரத்தில் துளை இருப்பின், அதனை தார், பூச்சிக்கொல்லி கொண்டு அடைக்கலாம். பச்சை மட்டைகளை வெட்டக்கூடாது. அவ்வாறு வெட்டுவதாக இருந்தால், நான்கு அடி விட்டு வெட்டவேண்டும். தோப்பில் பட்டுபோன மரங்கள் இருந்தால், அவற்றை அப்புறப்படுத்தி எரித்து விட வேண்டும்.மேலும், 10 மில்லி மானோகுரோட்டோபாஸ் மருந்தை, அதே அளவு தண்ணீருடன் கலந்து, வேர் மூலமாக செலுத்தி சிகப்பு கூன் வண்டை கட்டுப்படுத்தலாம். மருந்து செலுத்துவதற்கு முன்பு காய்களை பறித்துவிட வேண்டும்.

## வெளிமார்க்கெட்டில் கலப்பட உரங்கள்...அதிகரிப்பு! மகசூல் குறைவால் விவசாயிகள் கலக்கம்

விழுப்புரம்:விழுப்புரம் மாவட்டத்தில் சில தனியார் உரக் கடைகளில் தரமற்ற, கலப்பட உரங்கள் விற்பனை அதிகரித்துள்ளது. இது போன்ற உரங்களை பயன்படுத்தி, சாகுபடி குறைவதால் பல விவசாயிகள் கலக்கமடைந்துள்ளனர். விவசாயத்தில் கூடுதல் மகசூலை அதிகரிக்க பல்வேறு நிறுவனங்களின் தயாரிப்புகளான யூரியா, பொட்டாஷ், காம்பளக்ஸ், டி.ஏ.பி., அமோனியம் குளோரைடு, அமோனியம் பாஸ்பேட், பூச்சிக் கொல்லி மருந்துகள் அதிகளவில் பயன்படுத்தப்படுகிறது.

இதனால் உணவு தானியங்களின் தரம் மற்றும் ஊட்டச் சத்துகள் குறைந்து, விஷத்தன்மையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இருப்பினும் மக்கள் தொகை பெருக்கத்திற்கு ஏற்ப உணவு உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டும் என்ற கட்டாயத்தில் அரசும், வேளாண் வல்லுனர்களும் கண்டு கொள்வது இல்லை.

ரசாயன உரம்

அதிகளவு ரசாயன உரங்களை பயன்படுத்த கூடாது என தடை விதிக்கவும் அல்லது விவசாயிகளுக்கு அறிவுரை கூறவேண்டிய அரசும், வேளாண் வல்லுனர்களும், உரங்களை பயன்படுத்தி விளைச்சலை அதிகரிப்பதிலேயே கவனமாக உள்ளனர். இதனால் நாளுக்கு நாள் ரசாயன உரங்களின் பயன்பாடு அதிகரித்து வருகிறது.

சத்து குறைவு

இது போன்ற தானியங்களை கொண்டு தயாரிக்கும் உணவுகளின் சுவை குறைவதோடு, கிடைக்கும் சத்துகளும் குறைந்து, மனிதனுக்கு பல நோய்களை உண்டாக்குகிறது. இதனை தவிர்க்க வேளாண் விஞ்ஞானிகள் இயற்கை முறையில் சாகுபடி செய்ய பல முயற்சிகளை எடுத்து வருகின்றனர்.

இருப்பினும் ஆட்கள் கூலி உயர்வு உட்பட பல காரணங்களால், விவசாயிகள் தாங்கள் முதலீடு செய்த பணத்தை எடுக்க, கவர்ச்சிகரமான விளம்பரங்களை நம்பி ரசாயன உரங்களை பயன்படுத்துகின்றனர். நாற்று முதல் கதிர் முற்றும் வரை ரசாயன உரங்கள் அவசியம் என்ற நிலைக்கு பல விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

உரக் கடைகள் அதிகரிப்பு

இதனால் விழுப்புரம் மாவட்டத்தில் உரக்கடைகள் அதிகரித்துள்ளன. கிராமங்களில் உள்ள பல கடைகள் அரசு அனுமதியின்றி இயங்கி வருகிறது. இது போன்ற கடைகளில் கலப்பு உரங்கள் என்ற பெயரில் காலாவதியான மற்றும் பல்வேறு தரமற்ற ரசாயன பொருட்களை கொண்டு, சில விஷமிகள் தாங்களே சில உரங்களை தயாரித்து விற்கின்றனர். கல்வியறிவு இல்லாத விவசாயிகளிடம் இவற்றை விற்று கூடுதல் லாபம் ஈட்டுகின்றனர்.

இந்த உரங்களை விவசாயிகள் நம்பிக்கையுடன் வாங்கி பயன்படுத்தும் போது, உரிய நேரத்தில் சரியான சத்துக்கள் பயிர்களுக்கு கிடைக்காமல், வளர்ச்சி குன்றி, பூச்சி தாக்குதலும் ஏற்படுகிறது. இறுதியில் போதிய மகசூல் கிடைக்காமல் விவசாயிகள் கலக்கம் அடைகின்றனர். இதனால் சில விவசாயிகள் வேளான் தொழிலில் ஈடுபட சுணக்கம் காட்டுகின்றனர்.

ஆய்வு தேவை

இவற்றை தவிர்க்க வடகிழக்கு பருவமழை துவங்கியுள்ள தற்போது, விழுப்புரம் மாவட்டத்தின் பிரதான பயிரான நெல் சாகுபடியை விவசாயிகள் துவங்க உள்ளனர். அதிகாரிகள் முன் கூட்டியே நகரம் மற்றும் கிராமங்களில் உரக்கடைகள் அரசு அனுமதியுடன் இயங்குகிறதா, விற்கப்படும் உரங்கள் தரமானதா, அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் தயாரித்த உரங்களா என்பதை தீவிரமாக ஆய்வு செய்ய வேண்டும்.

மாவட்ட நிர்வாகம் கூட்டுறவு தொடக்க வேளாண்மை வங்கிகளில் அனைத்து உரங்களையும் விற்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## மஞ்சள் செடிகளை பாதுகாக்க ஊடுபயிராக ஆமணக்கு சாகுபடி

கள்ளக்குறிச்சி:கள்ளக்குறிச்சியில் மஞ்சள் பயிரின் பாதுகாப்பிற்கு ஆமணக்கு செடிகளை ஊடுபயிராக பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர். கள்ளக்குறிச்சி பகுதி கிராமங்களில் அதிகளவில் விவசாயிகள் மஞ்சள் சாகுபடி செய்து வருகின்றனர். இவைகளை பாதுகாக்க நோய் தாக்குதலை முன்கூட்டியே அறிவிக்கும் தன்மை கொண்ட ஆமணக்கு செடிகளை நிலத்தை சுற்றிலும் ஊடு பயிராக வளர்த்து வருகின்றனர். 10 மாத பயிரான மஞ்சள் செடிகளை விதைத்த மூன்றாவது மாதம் முதல் ஆமணக்கு செடிகளை நிலத்தை சுற்றிலும் நடுகின்றனர். இதன் மூலம் மஞ்சள் பயிரைத்தாக்கும் படைப்புழுவின் தொற்று முதலிலேயே ஆமணக்கு செடிகளின் இலைகள் மூலம் விவசாயிகள் தெரிந்து கொள்கின்றனர். பூச்சி மருந்து தெளித்து இரு பயிர்களையும் விவசாயிகள் பாதுகாக்கின்றனர். 6 மாத பயிரான ஆமணக்கு செடிகள் மூலம் விளக்கெண்ணெய் தயாரிக்க உதவும் ஆமணக்கு கிடைக்கிறது.

ஊடுபயிராக ஒரு ஏக்கர் அளவில் நடப்படும் ஆமணக்கு செடிகள் மூலம் 200 கிலோ ஆமணக்கு கிடைக்கும். ஒரு கிலோ ஆமணக்கு 50 ரூபாய் விற்பதால் விவசாயிகளுக்கு கூடுதல் பலன் கிடைக்கிறது.

இதனால் கள்ளக்குறிச்சி பகுதி விவசாயிகள் மஞ்சள் பயிருடன் ஊடுபயிராக ஆமணக்கு பயிரிடுவதில் ஆர்வம் காட்டுகின்றனர்.

## ஹைப்ரீடு சாமந்திப்பூக்கள் சாகுபடி

திருவெண்ணெய்நல்லூர்:திருவெண்ணெய்நல்லூர் அருகே ஹைப்ரீடு சாமந்திப்பூக்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன.

திருவெண்ணெய்நல்லூர் அடுத்த சரவணம்பாக்கத்தை சேர்ந்தவர் சீனு வாசன் (39). எம்.எஸ்.சி., பட்டதாரியான இவர் தனக்கு சொந்தமான நிலத் தில் 40 சென்ட் பரப்பள வில் வெண்டை சாகுபடி செய்திருந்தார்.
அறுவடை முடிந்த பின், கடந்த 50 தினங்களுக்கு முன்பு பெங்களூரு விலிருந்து ஹைப்ரீடு சாமந்திச்செடிகளை சாகுபடி செய்துள்ளார்.
இதில் முதல்கட்டமாக தினமும் 30 கிலோ அளவிற்கு பூக்கள் பூக்கிறது. பண்ருட்டி, கடலூர், திருவெண்ணெய்நல்லூர் பகுதியில் சீனுவாசன் விற்பனை செய்து வருகிறார்.
இன்னும் நான்கு நாட்கள் கழிந்த பின் அதிகளவில் பூக்கும். 110 நாட்களுக்கு மட்டும் பூக்கள் பூக்கும் என தெரிவித்தார்.
சாலையோரத்தில் உள்ள வயலில் சாமந்திப்பூக்கள் பூத்துக்குலுங்குவதால் பல்வேறு கிராம மக்களை பெரிதும் கவர்ந்துள்ளது.

### சந்தைகளுக்கு ஆடுகள் வரத்து சரிவால் விலை கிடு கிடு

சேலம்: தமிழகத்தில், சந்தைகளுக்கு விற்பனைக்கு வரும் ஆடுகள் குறைந்துள்ளதால், ஆட்டுக்கறியின் விலை கிலோவுக்கு, 50 ரூபாய் வரை உயர்வு ஏற்பட்டுள்ளது. தீபாவளி பண்டிகையின் போது, விலை மேலும் அதிகரிக்கும், என வியாபாரிகள் தெரிவித்தனர்.
தமிழக சுகாதாரத்துறை மேற்கொண்ட ஆய்வில், தமிழகத்தில் தினந்தாறும், 50 லட்சம் கிலோ ஆட்டுக்கறி, 75 லட்சம் கிலோ பிராய்லர் கறி, 40 லட்சம் கிலோ நாட்டுக் கோழி, 1.25 லட்சம் கிலோ மீன் வகைகள், 35 லட்சம் கிலோ மாட்டுக்கறி, 20 லட்சம் கிலோ பன்றி கறி பயன்படுத்தப்படுகிறது. இவை தவிர காடை, கவுதாரி, முயல், புறா, நண்டு ஆகியவையும் உணவாக பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஞாயிறுக்கிழமை உள்ளிட்ட விசேஷ தினங்கள், பண்டிகை காலங்களில், ஆவற்றின் பயன்பாடு, இரண்டு மடங்காக அதிகரிக்கிறது. பண்டிகை காலங்களில் ஆட்டுக்கறியின் பயன்பாடு, 1.10 கோடி கிலோவை தாண்டுகிறது.தமிழகத்தில் ஆடுகள் வளர்ப்பில் ஈரோடு, திருநெல்வேலி, சேலம், தூத்துக்குடி, தர்மபுரி

மாவட்டங்கள் முதன்மை பெறுகின்றன. இந்த மாவட்டங்களில் வளர்க்கப்படும் ஆடுகளை தவிர, ஆந்திரா, கர்நாடகா மாநிலங்களில் இருந்தும் தமிழகத்துக்கு ஆடுகள் விற்பனைக்கு வருகிறது.

தமிழகத்தில் போதிய மழை இன்மை, ரியல் எஸ்டேட் தொழிலின் வளர்ச்சி, நீலநாக்கு நோய் தாக்கம் ஆகியவற்றின் காரணமாக, ஆடு வளர்ப்பு தொழில் நசிவடைந்து வருகிறது. ஆடு வளர்ப்பு தொழிலில் பின்னடைவு ஏற்பட்டுள்ளதால், கடந்த, ஐந்து ஆண்டுகளில், ஆட்டுக்கறியின் விலை கடும் உயர்வு ஏற்பட்டு வருகிறது.

தமிழகத்தின் பிரசித்தி பெற்ற ஆட்டுச் சந்தைகளாக கருதப்படும், சேலம் மாவட்டம், மேச்சேரி, திருநெல்வேலி மாவட்டம், மேலப்பாளையம், தூத்துக்குடி மாவட்டம் கயத்தார், ஈரோடு மாவட்டம், வெள்ளகோவில், காங்கேயம், தர்மபுரி மாவட்டம், பென்னாகரம் ஆகிய இடங்களில் செயல்படும் சந்தைகளுக்கு, ஆடுகளின் வரத்தில் சரிவு ஏற்பட்டுள்ளது.

இதனால், ஏழு கிலோ எடையுள்ள ஆடு, 2,800 முதல், 3,200 ரூபாய்க்கு விற்றது, தற்போது, 3,300 முதல், 3,600 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது.மொத்த விலையில் உயர்வு ஏற்பட்டதை அடுத்து, தமிழகத்தின் அனைத்து நகரங்களிலும், ஆட்டுக்கறியின் விலையில், கிலோவுக்கு, 20 ரூபாய் முதல், 50 ரூபாய் வரை உயர்த்தப்பட்டுள்ளது. சேலத்தில் ஆட்டுக்கறி கிலோ, 400 ரூபாய்க்கு விற்றது, 450 ரூபாயாக அதிகரித்துள்ளது. இதே போல், அனைத்து நகரங்களிலும் விலை உயர்வு அமலுக்கு வந்துள்ளது.

இது குறித்து, சேலம் வ.உ.சி., மார்க்கெட் ஆட்டுக்கறி வியாபாரிகள் சங்கத்தின் முன்னாள் பொருளாளர் பழனிசாமி கூறியதாவது:

தமிழகத்தில் ஆட்டுக்கறியின் பயன்பாடு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. ஆனால், அதே நேரத்தில், ஆடுகள் வளர்ப்பு எதிர்பார்த்த அளவு இல்லை. மழை இல்லாததால், விவசாயிகள் ஆடு வளர்ப்பு தொழிலில் ஈடுபட முடியாத நிலைக்கு தள்ளப்பட்டு விட்டனர். ஆந்திர, கர்நாடகா மாநிலங்களில் ஆடுகள் விலை உயர்வு

ஏற்பட்டுள்ளதால், அங்கிருந்து கொண்டு வரும் ஆடுகளின் விலையும் அதிகரித்து, ஆட்டுக்கறியின் விலையும் உயர்கிறது.தீபாவளி பண்டிகையை தொடர்ந்து கிறிஸ்துமஸ், புத்தாண்டு, பொங்கல் பண்டிகை வருவதால், ஆட்டுக் கறியின் விலை, கிலோ, 500 ரூபாயை தொட்டு விட வாய்ப்பு உள்ளது, என்றார்.

### விளைச்சல் குறைவுநிலக்கடலை அறுவடை சீஸன் துவக்கம்

பனமரத்துப்பட்டி: பனமரத்துப்பட்டி பகுதியில், மானாவரி நிலக்கடலை அறுவடை துவங்கியுள்ளது. விளைச்சல் பாதியாக குறைந்ததால், விவசாயிகள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.பனமரத்துப்பட்டி பகுதியில், களரம்பட்டி, மூக்குத்திபாளையம், வாழகுட்டப்பட்டி, பாரப்படட்டி, நாழிக்கல்பட்டி உள்ளிட்ட கிராமங்களில், மானாவரி நிலக்கடலை சாகுபடி செய்யப்பட்டது. பருவ மழை ஏமாற்றியதால், நிலக்கடலை விதை சரிவர முளைக்காமல், மண்ணில் கருகியது.சில இடங்களில், பரவலாக நிலக்கடலை பயிர் முளைத்து வளர்ந்தது. பரவலாக பெய்த மழையால், பூ மற்றும் பிஞ்சு வைத்து, நிலக்கடலை உற்பத்தியானது. தற்போது, மானாவரி நிலக்கடலை அறுவடை சீஸன் துவங்கி உள்ளது. போதிய மழை இல்லாததால், நிலக்கடலை விளைச்சல் பாதியாக குறைந்தது. ஒரு செடியில், குறைந்த எண்ணிக்கையில், முதிர்ந்த காய்களும், பிஞ்சுகளும் உள்ளன. செம்மண் நிறைந்த வயலில், நிலக்கடலை விளைச்சல், சற்று அதிகமாக காணப்பட்டது.நிலக்கடலை விவசாயிகள் கூறியதாவது:

நிலக்கடலை பொறுத்தவரை, மானாவரியாக விதைத்து சாகுபடி செய்யப்படும். பெரும்பாலான விவசாயிகள், பருவ மழை இல்லாதால், நிலக்கடலை சாகுபடி செய்யவில்லை. இந்த ஆண்டு, நிலக்கடலை ஒரு படி, 15 ரூபாய் வரை விற்பனையாகிறது. விலை உயர்ந்த நிலையில், காய் விளைச்சல் குறைவாக இருப்பதால், விவசாயிகளுக்கு லாபம் இல்லை.இவ்வாறு கூறினர்.

### சீத்தாப்பழம் சீஸன் தாமதமாக துவக்கம்

நங்கவள்ளி: சீத்தாப்பழம் சீஸன் காலதாமதமாக துவங்கியுள்ளது. அதனால், கடந்த ஆண்டைவிட, குறைந்த விலைக்கு விற்பனையாகிறது.

நங்கவள்ளி மற்றும் மேச்சேரி பகுதிகளில், அதிகளவில் சீத்தாப்பழம் விளைகிறது. இங்கிருந்து, கோவை, மதுரை, திருச்சி மற்றும் கேரளாவுக்கு அதிகளவில் சீத்தாப்பழம், ஏற்றுமதி செய்யப்படுகிறது.நடப்பாண்டின் ஆரம்பத்தில் நிலவிய கடும் வறட்சி காரணமாக, ஆடி மாதத்தில் துவங்க வேண்டிய சீத்தாப்பழம் சீஸன், தற்போது துவங்கியுள்ளது. கடந்த ஆண்டு, ஒரு கூடை சீத்தாப்பழத்தை, விவசாயிகளிடமிருந்து, 150 முதல், 200 ரூபாய் வரை, வியாபாரிகள் வாங்கினர். தற்போது, ஒரு கூடை, 80 முதல், 150 ரூபாய் வரை மட்டுமே கிடைக்கிறது. சீஸன் தாமதமாக துவங்கி, ஒரே சமயத்தில் அதிகளவில் பழம் வர துவங்கியதால், விலை குறைவு ஏற்பட்டுள்ளது என, வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

### அவரையை தாக்கி வரும் புழுக்கள்

பனமரத்துப்பட்டி: எத்தனை முறை பூச்சிக்கொல்லி மருந்து அடித்தாலும், அவரைக்காயை தாக்கி சேதபடுத்தும் கூட்டுப் புழுவை ஒழிக்க முடியவில்லை. அதனால், ஏக்கருக்கு, 50 ஆயிரம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது என, பனமரத்துப்பட்டி பகுதி விவசாயிகள் விரக்தி அடைந்துள்ளனர்.பனமரத்துப்பட்டி வட்டாரத்தில், திப்பம்பட்டி, குரால்நத்தம், குள்ளப்பநாயக்கனூர், சாமகுட்டப்பட்டி, பெரமனூர், பனமரத்துப்பட்டி உள்ளிட்ட கிராமங்களில், பந்தல் அமைத்து, அவரைக்காய் நடவு செய்யப்பட்டுள்ளது. இங்கு, யானை காது அவரை, கொம்பு அவரை என, இரண்டு ரக அவரைக்காய் நடவு செய்யப்பட்டுள்ளது.
இப்பகுதியில் விளையும் அவரைக்காயை அறுவடை செய்து, திருச்சி, புதுச்சேரி, சென்னை, வேலூர், சேலம் உள்ளிட்ட இடங்களுக்கு விற்பனைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.
நடப்பாண்டில், செப்டம்பர் மாதத்தில், அவரைக்காய் அறுவடை சீஸன் துவங்கியது. சரியான நேரத்தில், போதிய மழை இல்லாததால், விளைச்சல் குறைந்தது. மேலும், பிஞ்சு நிலையில் உள்ள அவரையில், கூட்டுப் புழுகள் புகுந்து சேதத்தை ஏற்படுத்தியது. அவரை உட்பகுதிக்குள் நுழையும் புழுக்கள், கொட்டை

மற்றும் உட்புறத்தில் உள்ள பசுமையை சுரண்டி சாப்பிடுகின்றன.

சில அவரை, வெளிப் பகுதியில் பார்க்க நன்றாக தோன்றும். அதை பிரித்து பார்த்தால், உட்பகுதியில் இரண்டு விதமான கூட்டுப் புழுகள் இருந்து கொண்டு, பசுமையான சதைப் பகுதியை தின்று விடுகின்றன. கூட்டுப் புழுக்கள் தாக்கியதால், மூன்றில் ஒரு பங்கு அவரைக்காய் விற்பனைக்கு உதவாமல் வீணாகிறது. அதனால், விவசாயிகள் பெரும் வேதனை அடைந்துள்ளனர்.

அவரை பயிரிட்ட விவசாயி பாபு கூறியதாவது:

ஆண்டுக்கு, ஒரு ஏக்கர் நிலம், 25 ஆயிரம் ரூபாய்க்கு குத்தகைக்கு எடுத்து, அவரை பயிரிடுகிறோம். விதை, பந்தல் அமைக்க, கொடி கவாத்து செய்ய, களை பறிக்க, மருந்து தெளிக்க என, ஒரு லட்சம் ரூபாய் செலவு செய்கிறோம்.

தற்போது, அறுவடை சமயத்தில், அவரைக்காயில் கூட்டுப்புழுகள் தாக்கி, பெரும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளது. வாரம் ஒருமுறை பூச்சிக்கொல்லி மருந்து அடிக்கிறோம். ஆனால், புழுக்களை ஒழிக்கவே முடியவில்லை.

ஒரு ஏக்கரில், வாரம் ஒரு முறை, 500 முதல், 700 கிலோ அவரை அறுவடை செய்ய வேண்டும். ஆனால், சரியான மழை இல்லாததால், ஏக்கருக்கு, 200 கிலோ மட்டுமே அறுவடை செய்யப்படுகிறது. இதில், 200 கிலோ அவரையில், 50 கிலோ வரை, புழுக்கள் தாக்கி, சேதபடுத்திய காய்கள் வீணாகிறது. மீதம் ஒரு ஏக்கருக்கு, 150 கிலோ அவரை மட்டும் கிடைக்கிறது. இதனால், அவரை பயிரிட்டவர்களுக்கு, ஏக்கருக்கு, 50 ஆயிரம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

### ராசிபுரம் பகுதியில் மழைவிவசாயி பெரும் மகிழ்ச்சி

ராசிபுரம்: ராசிபுரம் சுற்று வட்டாரத்தில், தொடர் மழை பெய்து வருவதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.ராசிபுரம் பகுதியில், சில நாட்களாக கனமழை பொழிந்து வருகிறது. அதனால், பட்டணம், புதுப்பட்டி, வடுகம், சிங்காளந்தபுரம், காக்காவேரி, மசக்காளிப்பட்டி, மெட்டாலா, மங்களபுரம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில், நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்துள்ளது.வறண்ட

கிணறு, குளம், குட்டை, வாய்க்கால்களில் மழைநீர் தேங்கி கிடக்கிறது. சில இடங்களில் உள்ள கிணறுகளில், புதிய நீர் ஊற்று ஏற்பட்டு, கிணற்றின் நீர்மட்டம் அதிகரித்து வருகிறது. மேலும், தொடர்ந்து வானம் மேக மூட்டத்துடன் காணப்படுவதால், குளிர் காற்று வீசுகிறது.விவசாயிகள், தங்கள் விவசாய நிலங்களை, உழவு செய்து நெல் நாற்று, சோளம், பச்சைப்பயிர், சின்ன வெங்காயம், கொள்ளு உள்ளிட்ட பயிர்களை சாகுபடி செய்வதற்கான ஆயத்தப்பணிகளை மேற்கொண்டுள்ளனர். அதற்காக, நிலங்களை டிராக்டர் மூலம் உழவு பணியில் ஈடுபட்டுள்ளனர்.கடந்த இரண்டு ஆண்டுகளாக, மழையின்றி வருத்தப்பட்டிருந்த விவசாயிகளுக்கு, தற்போது பெய்து வரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

### பாசனத்திற்கு தண்ணீர் திறப்பு

அரூர்: கே.ஈச்சம்பாடி அணையில் பாசனத்திற்காக தண்ணீர் திறக்கப்பட்டது.தமிழக முதல்வர் ஜெயலலிதா உத்தரவின்படி தர்மபுரி மாவட்டம் கே.ஈச்சம்பாடி அணையின் இடது மற்றும் வலப்புற கால்வாய் மூலம் நேற்று, அமைச்சர் பழனியப்பன் பாசனத்திற்கு திறந்துவைத்தார். எம்.எல்.ஏ., அன்பழகன், மாவட்ட பஞ்சாயத்து குழு சேர்மன் அன்பழகன், கலெக்டர் விவேகானந்தன் உட்பட பலர் கலந்து கொண்டனர். இதன் மூலம் தர்மபுரி மாவட்டத்தை சேர்ந்த, 10 கிராமங்களும், கிருஷ்ணகிரி மாவட்டத்தை சேர்ந்த, 31 கிராமங்கள் என மொத்தம், 41 கிராங்களை சேர்ந்த, 6 ஆயிரத்து, 250 ஏக்கர் பாசன வசதி பெறும்.அணையின் உயரம், 19.4 அடியாகும். மொத்த கொள்ளளவு, 37.00 மில்லின் கன அடியாகும். தற்போது அணையிலிருந்து பாசனத்திற்கு விநாடிக்கு, 35 கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

### இறக்குமதி செலவினம் உயர்வால் உலர் பழங்கள் விற்பனை மந்தம்

புதுடில்லி:பொதுவாக, தசரா மற்றும் தீபாவளி பண்டிகை காலத்தில், நாடு தழுவிய அளவில், உலர் பழங்கள் விற்பனை சூடுபிடித்து காணப்படும்.ஆனால், இவ்-

வாண்டு, டில்லி, மும்பை, கோல்கட்டா, சென்னை உள்ளிட்ட பெரு நகரங்களில் உலர் பழங்கள் விற்பனையில் மந்த நிலை காணப்படுவதாக, இத்துறையைச் சேர்ந்த வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

பாதாம்:உலர் பழங்கள் பிரிவில், முந்திரி, திராட்சை, பாதாம், பிஸ்தா, அக்ரூட் போன்றவற்றிற்கு தேவை அதிகரித்துஇருக்கும். ஆனால், இவ்வாண்டு பொருளா-தார மந்த நிலையால், நிறுவனங்கள், உலர் பழங்கள் வாங்குவதை குறைத்து கொண்டுள்ளன. இதன் காரணமாகவே ஒட்டு மொத்த அளவில் உலர் பழங்கள் விற்பனை குறைந்து போயுள்ளது.இந்நிலையில், நடப்பாண்டின் துவக்கத்தில் இருந்து, டாலருக்கு எதிரான ரூபாய் மதிப்பு சரிவடைந்துள்ளதைஅடுத்து, வெளி-நாடுகளில் இருந்து இறக்குமதியாகும், உலர் பழங்களின் விலை அதிகரித்துள்ளது. குறிப்பாக, பாதாமின் விலை அதிகரித்து உள்ளதையடுத்து, இதன் இறக்குமதி மிகவும் சரிவடைந்துள்ளது.நடப்பாண்டில், உலர் பழங்கள் இறக்குமதி, 100 கோடி டாலர் அளவிற்கே இருக்கும் என, மதிப்பிடப்பட்டுள்ளது. ரூபாய் மதிப்பின் சரிவால், உலர் பழங்கள் வாயிலான லாப வரம்பு மிகவும் குறைந்துள்-ளது.இதுகுறித்து, உலர் பழங்கள் விற்பனைக்கு முக்கிய சந்தையாக திகழும், கரிபோலியைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவர் கூறும்போது, ‘நடப்பாண்டில் உலர் பழங்-களுக்கான தேவை, கடந்தாண்டை விட, 40 சதவீதம் குறையும் என, எதிர்பார்க்-கிறோம்’ என்று தெரிவித்தார்.

சர்வதேச பாதாம் சந்தையில் கலிபோர்னியாவின் பங்களிப்பு, 80 சதவீத அளவிற்கு உள்ளது.ஆனால், இவ்வாண்டு, கலிபோர்னியா வின் பாதாம் ஏற்றுமதி, 22 சத-வீதம் அளவிற்கு குறைந்து போயுள்ளதாக, ஆய்வு ஒன்றின் புள்ளிவிவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.பீங்கான் பொருட்கள்:சென்னை, மும்பை, டில்லி உள்-ளிட்ட பெரு நகரங்களில் உள்ள பல நிறுவனங்கள், உலர் பழங்களுக்கு பதிலாக, வீட்டு உபயோகத்திற்கான பீங்கான் பொருட்களை பரிசளிப்பதற்காக அதிக-அளவில் வாங்கி வருவதாக தெரியவந்துள்ளது.

இதுகுறித்து மும்பையைச் சேர்ந்த உலர் பழங்கள் விற்பனையில் ஈடுபட்டு வரும்

வர்த்தகர் ஒருவர் கூறியதாவது:பொதுவாக தசரா, தீபாவளி மற்றும் புத்தாண்டு வரை, உலர் பழங்கள் விற்பனை சூடுபிடித்து காணப்படும். மொத்த விலையில் மட்டுமின்றி, சில்லரை விற்பனையிலும், உலர் பழங்கள் விற்பனை மிகவும் குறைந்து போயுள்ளது.

பொருளாதார சுணக்கம்:இதற்கு எடுத்துக்காட்டாக, கூறவேண்டு மானால், இது போன்ற காலத்தில், உங்களைப் போன்ற செய்தியாளரிடம் பேசக்கூட முடியாது. ஆனால், இவ்வாண்டு அதுபோன்ற நிலை இன்னும் ஏற்படவில்லை. இதை வைத்தே, எந்த அளவிற்கு, உலர் பழங்கள் விற்பனை குறைந்து போயுள்ளது என்-பதை யூகித்து கொள்ளலாம்.இவ்வாறு, அந்த வர்த்தகர் தெரிவித்தார். கடந்த, 3–5 மாதங்களில், பாதாம், முந்திரி போன்றவற்றின் விலை, கிலோவுக்கு, 100–150 ரூபாய் வரை அதிகரித்து உள்ளது. உலர் பழங்கள் விற்பனை குறைவிற்கு, விலை உயர்வு மட்டுமின்றி, பொருளாதார சுணக்க நிலையால், நிறுவனங்கள் இவற்றை, வாங்கி பரிசளிப்பது குறைந்து போனதும் முக்கிய காரணமாகும்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

## 21.10.2013

## கரும்பு விவசாயிகளை பாதுகாக்க சர்க்கரை இறக்குமதிக்கு தடை விதிக்க வேண்டும்



கரும்பு விவசாயிகளை பாதுகாக்க சர்க்கரை இறக்குமதிக்கு தடை விதிக்க வேண்டும் என மத்திய அரசுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்தியா முழுவதும் ஆண்டுதோறும் 4 ஆயிரம் லட்சம் டன் கரும்பு உற்பத்தி செய்யப்படுகிறது. தமிழகத்தில் மட்டும் 400 லட்சம் டன் கரும்பு உற்பத்தி செய்யப்படுகிறது. இந்திய அளவில் மகாராஷ்டிரா, உத்தரப்பிரதேசம், கர்நாடகா, தமிழகம் போன்ற மாநிலங்கள் கரும்பு உற்பத்தியில் முன்னணியில் உள்ளன.

ஒரு டன் கரும்பிலிருந்து 100 கிலோ சர்க்கரையும், 100 யூனிட் மின்சாரம், 10 லிட்டர் எத்தனாலும் தயாரிக்க இயலும். மக்களின் அன்றாட வாழ்க்கையுடன் இணைந்த கரும்பு உற்பத்தியை முடக்கும் வகையில் மத்திய அரசு சமீபகாலமாக சர்க்கரை இறக்குமதிக்கு அனுமதி அளித்துள்ளதால் நாடு முழுவதும் கரும்பு

விவசாயிகளுக்கு கடும் பாதிப்பு ஏற்படும் நிலை உருவாகியுள்ளது. குறிப்பாக பாகிஸ்தானிலிருந்து வாகா எல்லை வழியாக லாரி, லாரியாக சர்க்கரை இறக்குமதி செய்வது கரும்பு விவசாயிகள் மத்தியில் கலக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 2012,13 மார்ச் இறுதி வரையிலான அரவை ஆண்டு முடிவில் 88 லட்சம் டன் சர்க்கரை இருப்பு உள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. 2013,14 அரவை ஆண்டில் சர்க்கரை உற்பத்தி 250 லட்சம் டன்னாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. வழக்கமாக உள்நாட்டுத் தேவைக்கு 235 லட்சம் டன் சர்க்கரை தேவைப்படும். இதுபோக மீதமுள்ள 15 லட்சம் டன் சர்க்கரை உபரி இருப்பு ஏற்படும்.

ஆக மொத்தம் இந்த ஆண்டு இறுதியில் 103 லட்சம் டன் சர்க்கரை இருப்பு இருக்கும் என புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. இந்த அளவிற்கு உபரி இருப்பு உள்ளதால் இந்த ஆண்டு இறுதியில் சர்க்கரை ஆலைகள் கரும்பு விவசாயிகளுக்கு கரும்புக்கு பணம் கொடுக்க முடியாமல் போகும் நிலை ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இப்பிரச்னையில் இருந்து மீளவும், விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டும் உடனடியாக சர்க்கரை இறக்குமதிக்கு மத்திய அரசு தடை விதிக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரி வருகின்றனர்.

**தொடர் மழையால் சாத்தியார் அணை நிரம்புகிறது விவசாயிகள் மகிழ்ச்சி**

கடந்த சில நாட்களாக பெய்து வரும் பலத்த மழையால் சாத்தியார் அணை நிரம்பி வருகிறது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

மதுரை மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் பாலமேடு மேற்கு பகுதியில் வகுத்துமலை, சிறுமலை தொடர்ச்சி,

மஞ்சமலை சரிவு, செம்பூத்துகரடு ஆகிய மலைப்பகுதிகளிலிருந்து சாத்தியார் அணையின் நீர் பிடிப்பு பகுதிகளில் வினா டிக்கு சுமார் 10 கன அடி தண்ணீர் வந்து கொண்டு இருக்கிறது. மேலும் கடந்த 16ம் தேதி பெய்த மழையில் மட்டும் சுமார் 46 மிமீ மழை யளவு பதிவாகி உள்ளது. 18ம் தேதி 7 மிமீ பதிவாகியுள்ளது. இந்த அணையை நம்பி கீழச்சின்னணம்பட்டி, அய்யூர், கோவில்பட்டி, எர்ரம்பட்டி, முடுவார்பட்டி உள்பட 10 கிராம கண்மாய்கள் உள்ளன. இதனால் சுமார் 2 ஆயிரம் ஏக்கருக்கு மேல் பாசன வசதி பெறும். இந்த அணையின் நீர்மட்டம் 29 அடி. தற்போது சுமார் 13 அடி அளவில் நீர்மட்டம் நிறைந்துள்ளது. இதில் 7 அடிக்கு மேல் சேறும் சகதியுமாக உள்ள தால், அணையை தூர்வார வேண்டும் என இப்பகுதி விவசாயிகள் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

தொடர்ந்து கன மழை பெய்தால் அணையின் நீர்மட்டம் 29 அடியும் நிரம்பி அணை திறப்பதற்கு வாய்ப்புள்ளது. தற்போது அணைக்கு வரும் நீர்வரத்தையும், அங்குள்ள நிலவரத்தையும் சாத்தியார் அணை உதவி பொறியாளர் சீனிவாசன் மற்றும் பணியாளர்கள் இரவு பகலாக கண்காணித்து வருகின்றனர்.

**கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் கருப்பு பன்னீர் திராட்சை விலை உயர்வு விவசாயிகள் மகிழ்ச்சி**

கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் வரத்து குறைவால் கருப்பு பன்னீர் திராட்சை விலை உயர்ந்துள்ளது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

தேனி மாவட்டம் கம்பம் பள்ளத்தாக்கு பகுதிகளான கூடலூர், சுருளிப்பட்டி, காமயகவுண்டன்பட்டி, அணைப்பட்டி, ஆனைமலையன்பட்டி, ஓடைப்பட்டி, தென்பழனி உள்ளிட்ட பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் கருப்பு பன்னீர் திராட்சை மற்றும் விதை யில்லா சீட்லஸ் ரக வகை திராட்சை பயிரிடப்பட்டு வருகிறது. தமிழகத்தில் திராட்சை உற்பத்தியில் தேனி மாவட்டம் முதலிடத்தில் உள்ளது.

இங்கு அறுவடை செய்யப்படும் திராட்சை பழங்கள் அதிகளவு கேரளாவிற்கும், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் விற்பனைக்காக அனுப்பி வைக்கப்படுகிறது. கடந்த சில மாதங்களுக்கு முன்பாக ஏற்பட்ட பருவ நிலை மாற் றம் மற்றும் அவ்வப்போது பெய்து வரும் சாரல் மழையின் காரணமாக திராட்சை கொடிகளில் ஏற்பட்ட நோய் தாக்குதலால் போதுமான அளவு விளைச்சல் இல்லை. இதனால் தற்போது கருப்பு பன்னீர் திராட்சை விலை அதிகரித்துள்ளது.

இதுகுறித்து விவசாயி அண்ணாத்துரை கூறுகையில், “கடந்த மாதம் வரை கிலோ ரூபாய் 30க்கு விற்பனை செய்யப்பட்டது. இப்போது பெரும்பாலான தோட்டங்களில் பழங்கள் இல்லாமல் பிஞ்சாக உள் ளது. எனவே வரத்து குறை வின் காரணமாக கடந்த சில தினங்களாக கிலோ 45 முதல் 50 வரை விற்பனையாகிறது. இருந்தாலும் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படாமல் லாபம் கிடைக்கிறது,’ என்றார்.

**பயிர் காப்பீட்டுக்கு ரூ.144 கோடி ஒதுக்கீடு கலெக்டர் தகவல்**

ராமநாதபுரம் மாவட்டத்தில் பயிர் காப்பீட்டுக்கு ரூ.144 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் 92 ஆயிரம் விவசாயிகள் பயனடைவார்கள் என கலெக்டர் நந்தகுமார் தெரிவித்தார்.

ராமநாதபுரத்தில் கலெக்டர் நந்தகுமார் தலை மையில் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடந்தது. கூட்டத்தில் விவசாயிகள் கூறுகையில், “பயிர் காப்பீட்டு திட்டத்தில் பதிவு செய்துள்ள விவசாயிகளுக்கு, அடுத்த சாகுபடி பணிகள் துவங்க உள்ள நிலையிலும் காப்பீட்டு தொகை வழங்கவில்லை. இதனால் விவசாயிகள் பெரும் சிரமத்தில் உள்ளோம். காவிரி கூட்டு குடிநீர் திட்டத்தில் விநி யோக குழாய்கள் பல இடங்களில் உடைந்து தண்ணீர் வீணாகி வருகிறது. இதனால் பல கிராமங்களில் குடிநீர் தட்டுப்பாடு உள்ளது. மாவட்டத்தில் கண்மாய்களை தூர்வார நடவடிக்கை எடுக்க வேண்டும்“ என்றனர்.

கலெக்டர் நந்தகுமார் பேசியதாவது: கடந்த ஆண்டு பயிர் காப்பீட்டுக்கு ரூ.144 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் 92 ஆயிரம் விவசாயிகள் பயன் பெறுவார்கள். நவம்பர் மாதத்திற்குள் பணம் பட்டுவாடா செய்யப்படும். 5 ஆயிரம் பண்ணை குட்டைகள் அமைக்கப்படவுள்ளன. வரும் மார்ச் மாதத்திற்குள் 1,500 பண்ணை குட்டைகள் அமைக்கும் பணி முடிவடைந்து விடும்.

அடுத்த ஆண்டு 1,500 பண்ணை குட்டைகளும், அதற்கு அடுத்த ஆண்டு 2 ஆயிரம் பண்ணை குட்டைகளும் அமைக்கப்படும். வைகை படுகையில் 4 இடங்களில் தடுப்பு அணைகள் அமைக்கும் திட்டத்திற்கு ரூ.78 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சக்கரக்கோட்டை கண்மாய் நீர்த்தேக்கம் திட்டம் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதில் தோண்டப்படும் மணலை எங்கு கொட்டுவது என்ற நிலையில் திட்டம் கிடப்பில் உள்ளது. பரளையாறு துஙர்வாரும் நடவடிக்கை எடுக்கப்படும். இதன் மூலம் 13 கிராமங்கள் பயன்பெறும். கூட்டு குடிநீர் திட்ட குழாய்களில் உடைப்புகளை சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். பரமக்குடியில் கழிவுநீர் ஆற்றில் கலப்பதை தவிர்க்க பாதாள சாக்கடை திட்டம் செயல்படுத்தப்படும். மாவட்டத்தில் 3,760 மெட்ரிக் டன் உரம் இருப்பு உள்ளதால், தட்டுப்பாடு இருக்காது. இவ்வாறு அவர் தெரிவித்தார்

**வரும் வாரத்தில் விவசாயிகளுக்கு பயிர்காப்பீட்டு தொகை கலெக்டர் தகவல்**

சிவகங்கை மாவட்டத்தில் விவசாயிகளுக்கு வரும் வாரத்தில் பயிர் காப்பீட்டுத் தொகை வழங்கப்படும் என கலெக்டர் ராஜாராமன் தெரிவித்தார்.

சிவகங்கையில் கலெக்டர் ராஜாராமன் தலைமையில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடந்தது. இதில் கலந்துகொண்ட விவசாயிகள் பேசுகையில், கடந்த ஆண்டில் பயிர் காப்பீடு செய்த விவசாயிகளுக்கு உடனடியாக இழப்பீடு தொகை வழங்க வேண்டும். விவசாயிகளுக்கு மானியத்தில் உரம் வழங்க வேண்டும்.

தென்னை விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க வேண்டும். வைகை மூன்றாம் பகுதியில் பார்த்திபனூர் மதகு அணைக்கட்டின் கீழ் இடது பிரதான கால்வாயில் சுமார் 35 கி.மீ தூரத்திற்கும் அதிகமாக சீமைகருவேல மரங்கள் அடர்ந்து காணப்படுகிறது. இவற்றை அகற்ற பலமுறை வலியுறுத்தியும் நடவடிக்கை இல்லை. தற்போது மழை பெய்ய தொடங்கியுள்ளதால் மரங்களால் நீர் வரத்து இல்லாமல் விவசாயிகள் பாதிப்படைவர். எனவே உடனடியாக மரங்களை வெட்டி அதன் வேரையும் பறிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். பண்ணை குட்டை அமைப்பதில் மாவட்டம் முழுவதும் அதிகாரிகள் துணையோடு முறைகேடு நடக்கிறது. விவசாயிகளே நேரடியாக குட்டை தோண்டிக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை விவசாயிகள் வலியுறுத்தினர்.

பதிலளித்து கலெக்டர் மற்றும் அதிகாரிகள் பேசுகையில், வரும் வாரத்தில் பயிர் காப்பீட்டு தொகை வழங்கப்படும். மாவட்டத்தில் 54,136 விவசாயிகளுக்கு ரூ.34.50 கோடி இதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. பண்ணைகுட்டை அமைக்கப்பட்ட பயனாளிகளின் பெயர் பட்டியல் சம்பந்தப்பட்ட ஊராட்சி அலுவலகத்தில் ஒட்ட நடவடிக்கை எடுக்கப்படும். கரும்பு விவசாயிகளுக்கு இந்த மாத இறுதிக்குள் ஆலை நிர்வாகம் ரூ.5 கோடி வழங்கவும், மீத தொகையை அடுத்த மாதம் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## இன்றைய வேளாண் செய்திகள்

## 21.10.2013

### நெல்வரத்து அதிகரிப்பால் உச்சத்தில் இருந்த அரிசி விலை குறைந்தது



மதுரை,

நெல்வரத்து அதிகரிப்பால் உச்சத்தில் இருந்த அரிசி விலை குறைந்து வருகிறது. கிலோவுக்கு ரூ.10 வரை குறையும் என வியாபாரிகள் கருத்து தெரிவித்து உள்ளனர்.

**<u>அரிசி விலை</u>**

கடந்த ஆண்டு பருவ மழை பொய்த்ததால் விவசாய பணிகள் பாதிக்கப்பட்டு, உணவு பொருட்களின் விலை விண்ணைத்தொட்டது. குறிப்பாக தமிழகத்தில் அரிசியின் விலை மிக அதிகமானது.

ஏனென்றால் தமிழகத்திற்கு கர்நாடக, ஆந்திரா மாநிலங்களில் இருந்து அதிக அளவு அரிசி வருகிறது. அங்கும் மழை பொய்த்து போனதால், அரிசி உற்பத்தி பாதிக்கப்பட்டது. அங்குள்ள அரிசி ஆலை உரிமையாளர்களும், வியாபாரிகளும்

நெல் மூடைகளை பதுக்கி வைத்து கூடுதல் விலைக்கு விற்றனர். இதனால் தமிழகத்தில் அரிசி விலை கிலோ ரூ.55 வரை விற்பனையானது.

<u>**நெல் விளைச்சல் அமோகம்**</u>

இந்தாண்டு ஜூன், ஜூலை, மற்றும் ஆகஸ்டு மாதங்களில் தென்மேற்கு பருவ மழை நன்றாக பெய்தது. இதன்காரணமாக தமிழகத்தின் தஞ்சாவூர், திருவாரூர் உள்பட காவிரி டெல்டா பகுதிகள் மற்றும் கர்நாடக பகுதிகளில் நெல் விளைச்சல் அமோக இருந்தது. தற்போது அங்கு அறுவடை நடந்து வருகிறது.

நெல் வரத்து அதிகமானதால் அரிசியின் விலை கடந்த மாதத்துடன் ஒப்பிடும் போது ரூ.5 வரை தற்போது குறைந்து உள்ளது. உதாரணமாக கிலோ ரூ.54–க்கு விற்பனையான உயர் ரக 1½ வருட பழைய பொன்னி அரிசி தற்போது ரூ.48–க்கு விற்பனையாகிறது.

<u>**தீபாவளி...**</u>

தற்போது ரூ.50–க்கு விற்பனையான கர்நாடக டீலக்ஸ் பொன்னி ரூ.45–க்கும், ரூ.46க்கு விற்பனையான தமிழக பொன்னி மற்றும் சன்னரகம் அரிசி ரூ.42–க்கும் விற்பனையாகிறது. இட்லி அரிசி, கல்சர் பொன்னி மற்றும் செல்ல பொன்னி ஆகியவை ரூ.35–ல் இருந்து ரூ.30 ஆக குறைந்து உள்ளது.

இந்த விலை மேலும் குறைய வாய்ப்பு இருப்பதாக தெரிகிறது. தீபாவளி பண்டிகை நேரத்தில் அரிசி விலை குறைந்தது மக்களிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

<u>**பதுக்கல்**</u>

அரிசி விலை குறைந்தது குறித்து மதுரை மாவட்ட அரிசி ஆலை உரிமையாளர்கள் சங்க தலைவர் கே.வசந்தவேல் கூறியதாவது:–

கடந்தாண்டு தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவ மழை பொய்த்து போனது. மின்தடையும் அதிகம் இருந்தது. இதனால் அரிசியின் விலை உச்சத்திற்கு சென்றது. இந்த ஆண்டு தென்மேற்கு பருவ மழை நன்றாக பெய்தது. இதனால்

கர்நாடகத்திலும், தமிழகத்தின் காவிரி டெல்டா பகுதியிலும் நெல் விளைச்சல் அமோக உள்ளது.

<u>மேலும் குறையும்</u>

தற்போது அறுவடை நன்றாக இருப்பதால், பதுக்கி வைத்திருந்த நெல் மூடைகளை விற்க தொடங்கி விட்டனர். இன்னும் ஒரு வாரத்தில் புதிய நெல் மூடைகளும் விற்பனைக்கு வர உள்ளதால் அரிசி விலை மேலும் குறையும்.

உதாரணமாக கடந்த மாதம் கர்நாடகவில் இருந்து கிலோ நெல் ரூ.30–க்கு வாங்கினோம். தற்போது (இந்த மாதம்) ரூ.25க்கு வாங்குகிறோம். இன்னும் இந்த விலை ரூ.5 குறைய வாய்ப்பு உள்ளது.

**விருதுநகர் மார்க்கெட் நிலவரம்: உளுந்து, துவரை விலை உயர்ந்தது சீனி, கடலை எண்ணை விலை குறைவு**



விருதுநகர்,

விருதுநகர் மார்க்கெட் டில் உளுந்து, துவரை விலை உயர்ந்துள்ள நிலையில், சீனி, கடலை எண்ணை ஆகியவற்றின் விலை குறைந்து உள் ளது.

<u>உளுந்து</u>

விருதுநகர் மார்க்கெட்டில் உளுந்து 100 கிலோ மூடைக்கு ரூ.400 விலை உயர்ந்து ரூ.3800 முதல் ரூ.4800 வரையிலும், உருட்டு உளுந்தம் பருப்பு ரூ.5,000 முதல்

ரூ.6,200 வரையிலும், தொலி உளுந்தம் பருப்பு ரூ.4,600 முதல் ரூ.5,000 வரையிலும் விற்பனை ஆனது. துவரை 100 கிலோ மூடைக்கு ரூ.400 விலை உயர்ந்து ரூ.4,800 முதல் 5,200 வரையிலும், துவரம் பருப்பு ரூ.5,800 முதல் ரூ.7,200 வரையிலும் விற்பனை ஆனது. பாசிப்பயறு 100 கிலோ மூடை 5,800 முதல் ரூ.6,200 வரை விலை சொல்லப் பட்டது. பாசிப்பருப்பு 100 கிலோ மூடை ரூ.8,000 முதல் ரூ.8,200 வரையிலும் விற்பனை செய்யப் பட்டது. மல்லி லயன் ரகம் 40 கிலோ ரூ.2900 முதல் ரூ.3,050 வரையிலும், மல்லி நாடு ரகம் ரூ.4,000 முதல் ரூ.4,500 வரையிலும் விற்பனை ஆனது. வத்தல் சம்பா ரகம் குவிண்டால் ரூ.5,800 முதல் ரூ.6,700 வரையிலும், ஏ.சி. வத்தல் ரூ.7,000 முதல் ரூ.7,500 வரையிலும், முண்டு வத்தல் ரூ.4,000 முதல் ரூ.5,800 வரையிலும், சோடை வத்தல் ரூ.1,500 முதல் ரூ.1700 வரையிலும் விலை சொல்லப்பட் டது.

<u>சமையல் எண்ணை</u>

விருதுநகர் எண்ணை மார்க்கெட்டில் கடலை எண்ணை 15 கிலோவுக்கு ரூ.25 விலை குறைந்து 1,350 ஆகவும், நல்லெண்ணை 15 கிலோ ரூ.3,267 ஆகவும், தேங்காய் எண்ணை ரூ.1,605 ஆகவும், சூரிய காந்தி எண்ணை ரூ.1500 ஆகவும் விற்பனை ஆனது.

நிலக்கடலை பருப்பு 80 கிலோ ரூ.3,900 ஆகவும், கடலை புண்ணாக்கு 100 கிலோ ரூ.3,800 ஆகவும், எள் புண்ணாக்கு 65 கிலோ ரூ.2,415 ஆகவும் விற்பனை ஆனது. பாமாயில் 15 கிலோ ரூ.900 ஆகவும் விற்பனை செய்யப் பட்டது.

விருதுநகர் சீனி மார்க்கெட்டில் சீனி குவிண்டாலுக்கு ரூ.25 விலை குறைந்து ரூ.3,175 ஆகவும், கொண்டைக்கடலை குவிண்டாலுக்கு ரூ.25 விலை குறைந்து ரூ.3,825 ஆகவும், பொரி கடலை 55 கிலோவுக்கு ரூ.60 விலை குறைந்து ரூ.2,890 ஆகவும், பட்டாணி 100 கிலோ ரூ.2,950 ஆகவும், பட்டாணி பருப்பு ரூ.3,100 முதல் ரூ.3,400 வரையிலும், மசூர் பருப்பு ரூ.4,150 முதல் ரூ.4250 வரையிலும், ரவை 90 கிலோரூ.3,180 ஆகவும், மைதா 90 கிலோ ரூ.3,110 ஆகவும் விலை சொல் லப்பட்டது.

<u>காபி</u>

விருதுநகர் காபி மார்க்கெட்டில் காபி பிளாண்டேசன் பிபி ரகம் 50 கிலோ ரூ.9,250 ஆக வும், ஏ ரகம் ரூ.9,900 ஆகவும், சி ரகம் ரூ.8000 ஆகவும், ரோபஸ்டா பிபி ரகம் ரூ.7,100 ஆக வும், பிளாக் பிரவுன் ரகம் ரூ.6,800 ஆகவும் விற்பனை ஆனது.

தீபாவளி பண்டிகை நெருங்கி வருவதையொட்டி பொருட்களின் தேவை அதி கரிப்பால் விலை உயர வாய்ப்பு உள்ளது என கருதப்படுகி றது.

**பெரம்பலூர், தேசிய தோட்டக்கலை இயக்க திட்டத்தின்கீழ் குழும அடிப்படையிலான திட்டங்கள்**




பெரம்பலூர்,

தேசிய தோட்டக்கலை இயக்¢கத் திட்டத்தின் கீழ் குழும அடிப்படை யிலான திட்டங்கள் செயல்படுத்திட திட்ட முன்மொழிவு வரவேற்கப் படுகிறது என்று மாவட்ட கலெக்டர் தரேஸ் அஹமது தெரிவித்துள் ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்ப தாவது:-

<u>திட்ட முன்மொழிவு</u>

தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின்கீழ் பெரம்பலூர் மாவட்டத்தில் பொது மற்றும் தனியார் கூட்டாண்மை முறையில் குறைந்த பட்சம் 50 எக்டரில் குழும அடிப்படையிலான திட்டங்கள் செயல்படுத்திட தகுதியான நபர்கள், ஏஜென்சி,

நிறுவனங்களிடம் இருந்து தமிழ்நாடு தோட்டக்கலை முகமைக்கு திட்ட முன் மொழிவு வரவேற்கப் படு கிறது.

இத்திட்டமானது பயிர்¢ சாகுபடி, பதப்படுத்துதல், மதிப்பு கூட்டுதல் மற்றும் விற்பனை ஆகியவற்றை உள்ள டக்கியதாகும். புதிய தோட் டம் அமைத்தல், நிழல்வலை கூடம் மற்றும் பசுமை குடிலில் காய்கறிகள் மலர்கள் சாகுபடி மேற்கொள்ள மானியம் 50 சதவீதம் முதல் 75 சதவீதம் வழங்கப்படுகிறது.

<u>மானியம்</u>

பதப்படுத்துதல் மற்றும் அறுவடைக்கு பின்செய் நேர்த்தி இனங்களான சிப்பம் கட்டும் முறை, குளிர்பதன கிடங்கு, குளிர் சாதன வாகனம், சிறிய அளவிலான பதப்படுத்தும் யூனிட் அமைப் பதற்கு 40 சதவீதம் முதல் 50 சதவீதம் மானியம் வழங்கப் படுகிறது.

<u>27-ந் தேதிக்குள்</u>

ஆர்வமுள்ள நபர்கள் தங்களது ஆர்வம் மற்றும் கருத்து குறிப்பினை தோட்டக் கலை வலைதளம் குறிப் பிடப் பட்டுள்ள விவரத்தின் படி 27.10.2013-க்குள் மின் னஞ்சல் மூலம் அனுப்பி வைக்கவும். விருப் பத்தை பதிவு செய்தவர்களுக்கு விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பது தொடர்பான ஒருங்கிணைப்பு கூட்டம். 28.10.2013 அன்று முற்பகல் 11.00 மணியளவில் வேளாண்மை இயக்குனர் அலுவலக கட்டிட வளாகம், மூன்றாம் தளம், சேப்பாக்கம், சென்னை அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

பெரம்பலூர் மாவட்டத்தில் பெருவாரியான விவசாயிகள் இத்திட்டத்தில் பங்குபெற்று பயன் அடைய வேண்டும்.

இவ்வாறு அவர் அதில் தெரிவித்துள்ளார்.

**50 கிராமங்கள் பயன்பெறும் வகையில் ஈச்சம்பாடி அணையில் இருந்து பாசனத்திற்கு இன்று தண்ணீர் திறப்பு**




மொரப்பூர்

50 கிராமங்கள் பயன் பெறும் வகையில் ஈச் சம்பாடி அணையில் இருந்து இன்று (ஞாயிற்றுக்கிழமை) தண்ணீர் திறந்து விடப் படுகிறது. இதன்மூலம் பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கை நிறைவேறியது.

<u>கடும் வறட்சி</u>

தர்மபுரி மாவட்டம் மொரப் பூர் பகுதியில் கடும் வறட்சி நிலவியது. இதனால் மொரப் பூர் ஒன்றியத்திற்குட்பட்ட கம்பைநல்லூர், மொரப்பூர் ஈச்சம்பாடி, மல்லாமாபுரம், அக்ரகாரம், பெரமாண்டப் பட்டி, நவலை உள்ளிட்ட சுமார் 50-க்கும் மேற்பட்ட கிராமமக்கள் குடிநீருக்கும், விவசாயத்திற்கும் தண்ணீர் இன்றி மிகவும் அவதிப்பட்டு வந்தனர். எனவே கிருஷ்ணகிரி அணையில் இருந்து தென் பெண்ணை ஆற்றின் வழியாக கே.ஈச்சம்பாடி அணைக்கு தண்ணீர் திறந்து விட வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்தனர்.

இதுதொடர்பான செய்தி, படம் “தினந்திந்தி” யில் ஜூலை மாதம் வெளியானது. மேலும் இதுகுறித்து உயர் கல்வித்துறை அமைச்சர் பி.பழனியப்பன் கவனத்துக்கு கொண்டு செல் லப்பட்டது. அதை தொடர்ந்து மொரப்பூர் பகுதியில் நடை பெற்ற ஒரு நிகழ்ச்சியில் செய்தி வெளியான “தினந்தந்தி” நாளி தழை அமைச்சர் பி.பழனியப் பன், மாவட்ட கலெக்டர் விவேகானந்தனிடம் கொடுத்து இதுதொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டார். அதை தொடர்ந்து கிருஷ்ணகிரி அணையில் இருந்து தென் பெண்ணை ஆற்றில் ஈச்சம் பாடி அணைக்கு தண்ணீர் திறந்து விட சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேசி கலெக் டர் விவேகானந்தன் நட வடிக்கை மேற்கொண்டார்.

<u>முதல்-அமைச்சர் உத்தரவு</u>

அதன்பேரில் ஆகஸ்டு மாதம் தென்பெண்ணை ஆற் றில் இருந்து ஈச்சம்பாடி அணைக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது. இந்த தண்ணீர் பெரமாண்டப்பட்டி, தொட் டம்பட்டி, அனுமன்தீர்த்தம் வழியாக நீப்பத்துரை சென் னம்மாள் கோவில் வரை தென்பெண்ணை ஆற்றில் சென்றடைந்தது. இதனால் அந்த பகுதியை சேர்ந்த 50 கிராமங்களில் குடிநீர் தட்டுப் பாடு நீங்கி, பல ஆயிரக்கணக் கான ஏக்கர் நிலம் பாசன வசதி பெற்றது. இதனால் விவசாயிகள், பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

இந்தநிலையில் விவசாயி களின் கோரிக்கையை ஏற்று முதல்-அமைச்சர் ஜெயலலிதா ஈச்சம்பாடி அணையில் இருந்து வலது மற்றும் இடது புற வாய்கால்களில் தண்ணீர் திறந்து விட உத்தரவிட்டுள் ளார். இதன் மூலம் தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட் டங்களில் உள்ள 6,250 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். ஈச்சம்பாடி அணையில் இருந்து இன்று (ஞாயிற்றுக் கிழமை) தண்ணீர் திறந்து விடு வதற்கான நடவடிக்கைகளில் பொதுப்பணித்துறை அலு வலர்கள் ஈடுபட்டு வருகின் றனர். ஈச்சம்பாடி அணையில் இருந்து பாசனத்திற்கு தண் ணீர் திறக்க நடவடிக்கை மேற் கொண்டதால் பொதுமக்கள், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந் துள்ளனர்.

**கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கனமழை தொடர்வதால் விவசாயிகள் மகிழ்ச்சி**



கிருஷ்ணகிரி,

கிருஷ்ணகிரி மாவட்டத் தில் கனமழை தொடர் வதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந் துள்ள னர்.

<u>கனமழை</u>

கிருஷ்ணகிரி மாவட்டத் தில் கடந்த ஆண்டு ஏற்பட்ட வறட்சியால் ஏரி-குளங்கள் வறண்டன. ஆறுகளும் நீரோட்டம் இல்லாமல் வறண் டது. இதனால் விவசாயம் பாதிக்கப்பட்டது மட்டுமின்றி குடிநீருக்கும் தட்டுப்பாடு ஏற் பட்டது. குறிப்பாக கிருஷ்ண கிரி, பர்கூர், போச்சம்பள்ளி, ஊத்தங்கரை உள்ளிட்ட பகுதி களில் நிலத்தடி நீர்மட்டம் குறைந்ததால், குடிநீர் சப்ளை செய்து வந்த ஆழ்துளை கிணறுகளும் வறண்டன. இதனால் பொதுமக்கள் பெரி தும் பாதிக்கப்பட்டார்கள். போச்சம்பள்ளி, ஊத்தங்கரை பகுதியில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் மா மற்றும் தென்னை மரங்கள் காய்ந்தன.

இந்தநிலையில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பரவலாக விட்டு விட்டு கன மழை பெய்து வரு கிறது. கடந்த வாரம் கிருஷ்ண கிரி மற்றும் சுற்றுவட்டார பகுதியில் நல்ல மழை பெய்த நிலையில் இடையில் வெயில் அடித்தது. பின்னர் கடந்த 2 நாட்களாக விட்டுவிட்டு மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் இரவு கிருஷ்ணகிரி பகுதியில் இடி-மின்னலுடன் பத்த மழை பெய்தது. பின்னர் நேற்று காலையில் சாரல் மழை பெய்தது. தொடர்ந்து வானம் மேகம் சூழ்ந்து, குளிர்ந்த காற்று வீசியது. இந்த மழையால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளார்கள்.

<u>சாலைகளில் வெள்ளம்</u>

நேற்று முன்தினம் இரவு பெய்த மழையால் கிருஷ்ணகிரி யில், சென்னை சாலை, பெங் களூர் ரோடு உள்ளிட்ட முக் கிய சாலைகளில் மழை நீர் ஆற்று வெள்ளம் போல் பெருக் கெடுத்து ஓடியது. தாழ் வான பகுதிகளில் குளம் போல் தேங்கியது. சில இடங் களில் கழிவு நீர் கால்வாய் நிறைந்து சாலையில் மழை நீருடன் கழிவு நீரும் பெருக் கெடுத்ததால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டனர். கிருஷ்ண கிரி-சேலம் தேசிய நெடுஞ்சாலையில் ஆஞ்சநேயர் கோவில் பிரிவு சாலையின் அருகே கழிவு நீருடன், மழை நீர் குளம்போல் தேங்கி உள்ளது. தீபாவளி பண்டிகை சூடுபிடிக்க உள்ள நிலையில் அவ்வப்போது மழை பெய்து வருவதால் வியாபாரிகள் சற்று கலக்கமடைந்துள்ளனர். இதற்கிடையில் நேற்று காலை 8 மணியுடன் முடிவடைந்த

24 மணி நேர நிலவரப்படி கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பெய்த மழை அளவு வருமாறு:- (மில்லி மீட்டரில்)

கிருஷ்ணகிரி -50, பாரூர் -1.20, தேன்கனிக்கோட்டை -13.30, ஊத்தங்கரை -2, தளி -35, பென்னுகொண்டாபுரம் -24.20, நெடுங்கல் -1.20, ராயக்கோட்டை -19 மற்றும் போச்சம்பள்ளியில் -6.20 மி.மீ. மழை பெய்துள்ளது. மாவட்டம் முழுவதும் மொத்தம் 152.30 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.